பக்கங்கள் : பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 மாசி 06 திங்கட்கிழமை (18.02.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 84

# இந்தியத் தலையீட்டால் பேராபத்து

# பெரும் பிரசாரக் களத்தில் ஜே.வி.பி.

## இன்று தொடக்கம் நாடளாவிய ரீதியில்

கொழும்பு,பெப்ரவரி 18

இலங்கையில் இந்தியாவின் புதிய தலையீட்டு நடவடிக்கைகளால் இலங்கைக்கு பேராபத்து ஏற்பட்டிருப்பதாக அச்சம் தெரிவித்திருக்கிறது ஜே.வி.பி. அது தொடர்பாக நாட்டு மக்களை எச்சரிப்பதற்கும், இவ்விடயத்தில் இலங்கை அரசை உறுதியான நடவடிக்கை எடுக்கத் தூண்டுவதற்குமாக இன்றுமுதல் நாடளாவிய ரீதியில் பெரும் பிரசாரக் களத்தில் இறங்குவதற்கு அக்கட்சி தீர்மானித்திருப்பதாக அறியவருகிறது.

இனப்பிரச்சினைத் தீர்விற்கான அரசியல்யோசனையாக அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை இலங்கை அரசு இப்போது திடீரென முன்வைத்தமைக்கு இந்தியாவின் வேண்டுகோளும் அழுத்தமுமே காரணம் எனக் குற்றம் சாட்டி வந்த ஜே.வி.பி., புதுடில்லிக்கு எதிராக பகிரங்கப் பிரசாரத்தை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளது.

அதன்படி -

இலங்கையில், இந்தியாவின் புதிய நடவடிக்கைகளினால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் குறித்து பொதுமக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கான ஜே.வி.பியின் முதலாவது பேரணி இன்று அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இது குறித்துத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

கண்டி, காலி போன்ற நகரங்களிலும் இவ்வாறான பேரணிகளை நடத்துவதற்கு கட்சி தீர்மானித்துள்ளது.

### இடைக்கால நிர்வாக சபைக்கும் எதிர்ப்பு

இந்தியாவின் வேண்டுகோளுக்கும்

(10ஆம் பக்கம் பார்க்க)

# தனி நாடாகியது கொசோவோ

## சுதந்திர அறிவிப்பை ஆடிப்பாடிக் கொண்டாடினர் மக்கள்

பிரிஸ்டினா, பெப். 18

சேர்பியாவிலிருந்து பிரிந்து தன்னை ஒரு தனிநாடாக ஒருதலைப்பட்சமாக பிரகடனப்படுத்தியிருக்கிறது கொசோவோ.

சேர்பியாவிலிருந்து பிரிந்து கொசோவோவை தனிநாடாக அறிவிக்கும் பிரகடனத்தில் கொசோவோ நாடாளுமன்றம் நேற்று வாக்களித்தமையைத் தொடர்ந்து சுதந்திரத் தனிநாடாக கொசோவோவை அறிவித்தனர் அந்நாட்டுப் பிரதமர் மற்றும் ஜனாதிபதி.

தலைநகர் பிரிஸ்டினாவில் நடந்த நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏகமனதாக சுதந்திரப் பிரகடனத் தீர்மானத்தை நேற்று நிறைவேற்றினர். இவ்வேளையில் நகரமே பட்டாசுகளா

(10ஆம் பக்கம் பார்க்க)



சுதந்திரத்தைக் கொண்டாடி மகிழும் அல்பேனியர்கள்...

## இலங்கை அரசு அங்கீகரிக்கவில்லை

கொழும்பு, பெப். 18

சேர்பியாவிலிருந்து பிரிந்து கொசோவோ ஒருதலைப்பட்சமாக தனிநாடாகப் பிரகடனம் செய்திருப்பதை அங்கீகரிக்கவில்லை - ஏற்றுக்கொள்ளவில்லை - என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளிநாட்டு அமைச்சு நேற்று வெளியிட்ட அறிக்கையில் -

சேர்பியாவின் பெரும்பான்மையான மக்களின் சம்மதம் - அங்கீகாரம் - இன்றியே ஒருதலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்டிருக்கின்றது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரப் பிரகடனத்துக்கு அமெரிக்கா ஆதரவு; சட்டவிரோதமானது என்கின்றது ரஷ்யா

பிரிஸ்டினா, பெப். 18

கொசோவோவின் சுதந்திரப் பிரகடனத்துக்கு அமெரிக்கா உட்பட்ட பல மேற்குலக நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன. தற்போது ஆபிரிக்க விஜயத்தை மேற்கொண்டிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி புஷ் , கொசோவோவின் சுதந்திரப் பிரகடனத்துக்கு ஆதரவு தெரிவித்து கருத்து வெளியிட்டுள்ளார்.

''கொசோவோ விவகாரத்தில் எங்களது நிலைப்பாடு பால்கன் வட்டாரத்தில் ஸ்திரத்தன்மை ஏற்படும் வகையில் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்பதுதான். கொசோவோவில் வாழும் சேர்பியர்களின் உரிமை காக்கப்படுமென கொசோவோ தெளிவுபடுத்தியிருப்பது சந்தோசத்தைத் தருகின்றது.''

- என்று ஆபிரிக்க நாடான தன்சானியாவில் வைத்து புஷ் நேற்று கருத்து வெளியிட்டார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச மன்னிப்புச் சபையை இங்கே வர அனுமதிக்க முடியாது

### அமைச்சர் ரம்புக்வெல சொல்கிறார்

கொழும்பு, பெப். 18

எக்காரணம் கொண்டும் சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி எவரும் நாட்டிற்குள் வருவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. அது குறித்த பேச்சுக்கே இடமில்லை. சர்வதேச மன்னிப்புச் சபையும் புலிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே செயற்படுகிறது..

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல.

சர்வதேச மன்னிப்புச் சபையை நாட்டுக்குள் வருவதற்கு அரசாங்கம் அனுமதியளிக்க

(10ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு இடைக்கால சபையை இந்த வாரம் நிறுவ நடவடிக்கையாம்

கொழும்பு, பெப். 18

வடக்கிற்கான இடைக்கால சபை இந்த வாரத்தில் அமைக்கப்படவுள்ளதென கொழும்பிலிருந்து வெளியாகும் ''லக்பிம'' ஆங்கில வார ஏடு தகவல் வெளியிட்டுள்ளது.

அந்த ஏட்டில் இது தொடர்பில் வெளியாகியுள்ள விவரம் வருமாறு:-

எதிர்வரும் புதன்கிழமை நடைபெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் வடக்கு இடைக்கால சபை குறித்து விவாதிக்கப்படவுள்ளது. இடைக்கால சபைக்கு 5 உறுப்பினர்கள் நியமிக்கப்படலாம் எனத் தெரிகிறது. வடமாகாண ஆளுநராக வீ.ஆனந்தசங்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. செயலாளர் நாயகத்தின் சார்பில் விசேட பிரதிநிதி இலங்கை வருகிறார்

### இங்குள்ள நிலைமையை நேரில் கண்டறிவதற்காக

கொழும்பு, பெப்.18

இலங்கையின் நிலைமை குறித்து நேரில் கண்டறிந்து தமக்கு விரிவான அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஐ.நா.செயலாளர் நாயகம் பான் - கீ - மூன், தமது அரசியல் விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் நாயகமான அங்கெலா கனே அம்மையாரை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்புக்கு அனுப்புகின்றார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சிக் குழுவின் யோசனை குறித்து கூட்டமைப்பிடமும் கருத்துக் கேட்கப்படும்

### அமைச்சர் திஸ்ஸ விதாரண தகவல்

கொழும்பு,பெப்.18

இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இறுதி யோசனை தயாரிக்கப்பட்டு முடிந்ததும், அந்த யோசனை தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் கருத்துகளைத் தெரிந்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவரும் அமைச்சருமா

(10ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 28 - 10 - 1928

மறைவு 19 - 01 - 2008

### திருமதி தனலட்சுமி விநாசித்தம்பி

(தோரையடி, அளவெட்டி)

அன்பும் கருணையும் அகத்தே கொண்டாய்
மனம் போல் வாழ்வை அமைத்துக் கொண்டாய்
ஏழையின் வாழ்வில் இறைவனைக் கண்டாய்
அணிஞ்சிலடி விநாயகர் ஆலயத் திருத்தொண்டால்
அவர் தம் பாதங்களில் பணிந்துகொண்டாய்.

*குமாரசாமி வீதி,*
*கந்தர்மடம்.*

(71215)

- குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன சக ஊழியரான
ஜெயசிங்கம் பிஸ்மார்க் அவர்களின்
அன்புத் தந்தையார்

அமரர்

### N.S.ஜெயசிங்கம்

*(நீக்கிலாப்பிள்ளை)*

அவர்கள் 17.02.2008 அன்று காலமானதை அறிந்து ஆறாத்துயரில் மூழ்கியிருக்கின்றோம். ஆற்ற முடியாத அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். சமூக செயற்பாட்டு மைய
உத்தியோகத்தர்கள்.

(71213)

## கண்ணீருடன்...

*கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளாக எமது மன்றத்தின் கலை, இலக்கியப் பணிகளுடன் தன்னைக் கரைத்துக் கொண்ட கலைஞனும் மன்றத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரும் நிர்வாக உறுப்பினருமான*



(8/551509)

'கலைக்குரல்'

### என்.எஸ்.ஜெயசிங்கம்(நீக்கிலாப்பிள்ளை)

அவர்கள் நேற்று (17.02.2008) ஞாயிற்றுக்கிழமை அமரத்துவமடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆறாத்துயரும் அடைந்துள்ளோம். அவருக்கு எமது இதயம் கனக்கும் கண்ணீர்த் துளிகளாக் காணிக்கையாக்குவதுடன், அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*238, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

இயக்குநர், அங்கத்தவர்கள்,
திருமறைக் கலாமன்றம்.

*குறிப்பு: இன்று பிற்பகல் 2.45 மணி யளவில் அவரின் புகழுடல் எமது மன்றத்தின் கலைத்தூது மணி மண்டபத்தில் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்த்தப்படவுள்ளது. இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு எமது மன்ற அங்கத்தவர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.*

## மரண அறிவித்தல்



### திருமதி விமலாதேவி சபாரட்ணம்

சாமியன் அரசடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வைமன் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி விமலாதேவி சபாரட்ணம் 16.02.2008 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேந்திரம் சபாரட்ணம் அவர்களின் அருமை மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், திருமதி கனகம்மா - இராஜேந்திரம் தம்பதியினரின் அருமை மருமகளும், ராதிகா (U.K), பிரியதர்ஷினி, சந்திரிகா (அனுஷா), தனூர்த்தனன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெகன் (U.K), நிமலராஜன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜதுர்ஸ் குட்டியின் அன்புப் பேர்த்தியாரும், சிவசுப்பிரமணியம், நகுலேஸ்வரி, கலாநிதி, கலாஞானி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வதனி, சபா, இராசலிங்கம், ராயூ, அமரர் நடராஜா மற்றும் ரூபாவதி, திரு. திருமதி வில்வராஜா, கனகரட்ணம், செல்வரட்ணம், ஜெயரட்ணம் ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.02.2008) திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (19.02.2008) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு இறுதிக்கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு 10 மணியளவில் கல்கிசை மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(A)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.18

வரணி, இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பி.ப 1மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் சு.தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும் இப்போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்விவலய பிரதிக்கல்விப்பணிப்பாளர்(கல்வி முகாமைத்துவம்) பீ.முத்துலிங்கம் கலந்து கொள்வார். (1-207)

* * *

பருத்தித்துறை,பெப்.18

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர நவோதயாப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன் மைப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமை கல்லூரி மைதானத் தில் அதிபர் திருமதி.செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெற உள்ளது.

வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வி.செல்வராஜா பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார். திருமதி செல்வராஜா விளையாட்டுக் களில் வெற் றியீட்டும் வீராங்கனைகளுக் கானபரிசில் களைவழங்குவார். (1-218)

## திருமலையில் இளைஞர் சுட்டுக்கொலை

கொழும்பு, பெப். 18

திருகோணமலை, வில்கம் விகாரப் பகுதியில் கிளைமோர் ஒன்றைப் பொருத்த முற்பட்டவர் எனக் கூறப்படும் இளைஞர் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர் உயிரிழந்துள்ளார் என்றுபடைத்தரப்பில் அறிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்ட தேடுதலின்போது கிளைமோர்க் குண்டு ஒன்றையும், ஒரு கிலோகிராம் எடையுள்ள ரி.என்.ரி. வெடிமருந்துகளையும், கைக்குண்டு ஒன்றையும் மற்றும் 50 ரவைகளையும் அவர்கள் மீட்டுள்ளனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (சி)


### புத்தகம் கட்டுநர் பயிற்சியாளர் தேவை

*புத்தகம் கட்டுநர் (Book Binders) பயிற்சியாளர்கள் தேவை.*

*யாழ் மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிக்கும் பெண்கள் முன்னுரிமை உடையவர்கள்.*

*ஓரளவு தமிழ்மொழி அறிவு போதுமானது.*

*முற்பகல் 10.00 மணிமுதல் பிற்பகல் 3.30 மணிவரை நேரில் வரவும்.*

பாரதி பதிப்பகம்,
430, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.


## பத்திரிசியார் கல்லூரியில் அரங்கியல் கண்காட்சி

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி நாடகஅரங்கியல் மாணவர்கள் நடத்தும் அரங்கியல் கண்காட்சி இன்றும்நாளை செவ்வாய்க் கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை கல்லூரி யின் லோங் கட்டடத்தில் இடம்பெறஉள்ளது.

உலக நாடக மாதிரிகள், தமிழ் நாடக மாதிரிகள், கத்தோலிக்க நாடக அரங்க மாதிரிகள், வேட முகங்கள்,வேட உடைகள் ஆகியன கண்காட்சியில் காட்சிப் படுத்தப்பட இருக்கின்றன.

நாடக அரங்கியல் பாடம் கற்கும் மாணவர்களுக்கு பயனளிக்கக் கூடிய வகையில் இந்தக் கண்காட்சி அமைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (1)


### படிவம்

மொறட்டுவப் பல்கலைக்கழக 2007/2008 அநுமதிக்கு, மேலதிகமாகத் தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

[illegible] 05.03.2008

Bharathy Pathippakam,
430, K.K.S. Road, Jaffna.


## மரண அறிவித்தல்

### N.S.ஜெயசிங்கம் *(நீக்கிலாப்பிள்ளை)*

(முன்னாள் ஊழியர், யாழ்.பல.நோ.கூ. சங்கம், மூத்த நிர்வாக உறுப்பினர், யாழ் திருமறைக் கலாமன்றம்)



நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட N.S.ஜெயசிங்கம் நேற்று (17.02.2008) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சந்திராவின் அன்புக் கணவரும் பிஸ்மார்க் (றமணன் - JSAE), ஆன் லக்ஷியா, நிருபா (ஆசிரியை, ஞானக் குழந்தைகள் இல்லம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் P.S.அல்பிரட், S.சறோஜா, F.ராஜகுமார், P.பாலகுமார் ஆகியோரின் மைத்துனரும் N.S.அன்ரனிப்பிள்ளை, S.மரியநாயகம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.02.2008) திங்கட்கிழமை பி.ப 4 மணிவரை யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து பி.ப 4.30 மணியளவில் நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*37/6, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(71214)

தகவல்:
குடும்பத்தினர்.
சக. மரியநாயகம்
(சகோதரன் - யாழ். திருவழிபாட்டு நிலையம்

### *திருமதி*

### சறோஜினிதேவி செல்வக்கதிர்காமத்தையா

இடைக்காடு, வளலாயைப் பிறப்பிடமாகவும் கைதடி தெற்கு, கைதடியை வாழ்விடமாகவும், தற்போது ஹெந்தலை வீதி, வத்தளை, கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி செல்வக்கதிர்காமத்தையா (16.02.2008) சனிக்கிழமை கொழும்பில் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் இடைக்காடு வளலாயை சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை(ஆசிரியர்)- தெய்வானப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், கைதடி தெற்கு, கைதடியைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தர் மற்றும் நாகம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், கந்தர் செல்வக்கதிர்காமத்தையா (ஓய்வு பெற்ற சாரதி, தேசிய வீடமைப்பு அதிகாரசபை, யாழ்ப்பாணம் - கொழும்பு) அவர்களின் அன்பு மனைவியும், பரமேஸ்வரி, விமலாதேவி, விவேகானந்தன் (சுவிஸ்), இரவிந்திரன்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


*கைதடி தெற்கு,*
*கைதடி.*

(A)

*தகவல்*
கந்தர் ஜெகதீஸ்வரன்
(மெக்கானிக் ஈசன்) மைத்துனர்

## மரண அறிவித்தல்

### *சங்கரி சுப்பையா*



வேலன் குளம், நெடுங்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரி சுப்பையா நேற்று (17.02. 2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரி-பதுஞ்சலியின் அன்பு மகனும், கண்ணகையின் அன்புக் கணவரும், நாச்சிப்பிள்ளை, அமரர்களான சிதம்பரப்பிள்ளை, சின்னர், சின்னக்குட்டி, சின்னத்தம்பி, அன்னப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற தவராசா மற்றும் மனோன்மணி (நீர்வேலி), தெய்வேந்திரம்பிள்ளை (France), தனலட்சுமி, சரோசா (நீர்வேலி),சிவானந்தம், தனபாலசிங்கம் (France), கோணேசமூர்த்தி, மனோரஞ்சிதமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலசிங்கம் (நீர்வேலி), தேவதாஸ், தயாளன் (நீர்வேலி), செல்வராசா, தங்கராணி(France), இரத்தினதேவி, விஜயசாந்தினி(France), தவமணி, சித்திராதேவி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கந்தையா, இராசையா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2008) திங்கட்கிழமை முள்ளியவளை மருமகனின் (தேவதாஸ்) இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முள்ளியவளை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நீர்வேலி தெற்கு,*
*நீர்வேலி.*

(71218)

*தகவல்:*
மருமக்கள்
R.பாலசிங்கம்,
N.தயாளன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் வலி.தெற்கு, வலி.வடக்கு ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளின் மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் பயிற்சி பெற்ற மாணவர்களின் கண்காட்சி அண்மையில் இடம்பெற்றது.
நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாகக் கலந்துகொண்ட வலி.வடக்கு பிரதேச செயலர் க. முரளிதரன், வலி.தெற்கு பிரதேச செயலர் செல்வி த. மங்களாதேவி ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதல் இரு படங்களிலும் காணலாம்.
மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தி. தியாகமூர்த்தி கண்காட்சியைப் பார்வையிடுவதை மூன்றாவது படத்தில் காணலாம். (படங்கள்: நேசன்)

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், பெப்.18

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 2008 ஆம் ஆண்டிற்கான கலாபூஷண விருதிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கு ஏற்ப நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் சிற்பம், ஓவியம், நடனம், வாய்ப்பாட்டு, தவில், நாதஸ்வரம், நாடகம், சினிமா, நாட்டுப்புறவியல், இலக்கியம், நாட்டுக்கூத்து, ஊடகத்துறை போன்ற பல்வேறு துறைகளில் மிகவும் சிறப்புச் சேவையாற்றிய 60 வயதிற்கு மேற்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எனவே தகுதியானவர்கள் பிரதேச செயலக கலாசார பிரிவில் விண்ணப்பங்களை பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு பதில் பிரதேச செயலர் சி. ஏ. மோகன்றாஸ் கேட்டுள்ளார். (203)

## காரைநகர் சாம்பலோடை மயான வீதி திருத்தம்

யாழ்ப்பாணம், பெப்.18

நீண்டகாலமாகத் திருத்தப்படாது இருந்த சாம்பலோடை மயான வீதி காரைநகர் பிரதேச சபையின் நிதியிலிருந்து திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

சாம்பலோடை மயானத்திற்கு இறந்தவர்களைத் தகனம் செய்ய செல்பவர்களும் மற்றும் குடிதண்ணீர் பெறச் செல்பவர்களும் என நாளாந்தம் நூற்றுக்கணக்கான மக்கள் இந்த வீதியை பயன்படுத்தி வருகின்றனர்

நீண்டகாலமாக இந்த வீதி திருத்தம செய்யப்படாமையால் இவ் வீதியைப் பயன்படுத்தும் பலரும் போக்குவரத்து செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.

தற்போது இந்த வீதி காரைநகர் பிரதேச சபையின் 9 லட்சம் ரூபா நிதியின் மூலம் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. (203-68)

## வலி.தென்மேற்குப் பிரதேச விவசாயிகளுக்கு

# சிறுதானிய பயிர்ச் செய்கைக்கான விதைகளை கமநலசேவை நிலையங்கள் மூலம் வழங்கவேண்டும்

### மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத் தலைவர் கோரிக்கை

வலி.தென்மேற்கு,பெப்.18

சிறுதானிய பயிர்ச்செய்கையை மேற்கொள்ள விருக்கும் வலி.தென்மேற்குப் பிரதேச விவசாயிகளுக்குக் கமநல சேவை நிலையங்கள் மூலம் எள், பயறு, கௌபி, உழுந்து மற்றும் சணல் போன்ற விதைகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் சார்பில் அதன் தலைவர் சி.பொ.மா.க.முதலியார் யாழ்.கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நெல் அறுவடை செய்த வயற்காணிகளில் சிறு தானியப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் அதற்கான விதைகளை இப் பிரதேசத்திலுள்ள கமநல சேவை நிலையங்களில் பெறமுடியாது சிரமப்படுகின்றனர்.

இந்த நிலையங்களின் கையிருப்பில் விதை தானியங்கள் இல்லாமையால் தனிப்பட்டவர்களிடம் அதிக விலை கொடுத்து அவற்றைக் கொள்வனவு செய்துவருகின்றனர்.

ஒரு கிலோ எள் விதை 200 ரூபா முதல் 250 ரூபாவாகத் தனியார் விற்பனை செய்துவருகின்றனர்.

ஒரு கிலோ சணல் விதை 80 ரூபாவாக விற்கப்படுகின்றது.

இதேவேளை - கடந்த வருடத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களான சர்வதேச கெயர் நிறுவனம், உலக உணவு நிறுவனம் மற்றும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஆகியன இப்பிராந்திய விவசாயிகளுக்கு விவசாயிகள் சம்மேளனங்கள் ஊடாக சிறு தானிய விதைகளை வழங்கியிருந்தன.

இதனால் அதிக பயனை விவசாயிகள் பெற்றனர்.

இவ்வருடம் இதேபோல் வழங்கி உதவினால் விவசாயிகள் நன்மை அடைவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (203-135)

## உரும்பிராய் கிழக்குப் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது

### அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.18

உரும்பிராய் கிழக்குப் பிரதேசத்தில் கடந்த காலங்களில் இடம் பெற்று வந்த சட்ட விரோத கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் கடந்த வாரம் தொடக்கம் பெருமளவு நிறுத்தப்பட்டு விட்டதாக அப்பகுதி மக்களால் மகிழ்ச்சி தெரிவிக்கப்படுகின்றது.

அப்பகுதியில் உள்ள சனசமூக நிலையங்களின் பிரதி நிதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக இத்தகைய சட்ட விரோத செயற்பாடுகள் நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை இந்த உற்பத்தியில் ஈடுபட்டு வந்த பலர் தாம் உற்பத்திக்காக உபயோகித்த உபகரணங்களை சனசமூக நிலையங்களின் பிரதி நிதிகளிடம் ஒப்படைத்துள்ளனர் எனவும் சிலர் தாமே அவற்றை உபயோகிக்க முடியாதவாறு சேதப்படுத்தியுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

அத்துடன் ஏனைய அயல் கிராமங்களிலும் தாம் இப்படியான விழிப்புணர்வுக் கருத்துக்களை நடத்தி கசிப்பு உற்பத்தியை முற்றாக நிறுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அதற்கு அங்குள்ள சன சமூக நிலையங்களும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் சனசமூக நிலையப் பிரதிநிதி ஒருவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (203-228)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்

யாழ்ப்பாணம், பெப்.18

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் பௌர்ணமித் தினத்தில் நடத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிருதிருமுறைப் பாராயணம் என்பன நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. யாழ்ப்பாணம், கந்தர்மடம், குமாரசாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்தமடத்தில் பீடாதிபதி ஸ்ரீ வேத வித்தியாசாகர் சுவாமிகளின் அருளாசியுடன் இந்நிகழ்வு நடைபெறும். (203)

## முட்டை விலை குறைவடைந்துள்ளது

யாழ்ப்பாணம், பெப்.18

குடாநாட்டில் முட்டையின் விலை குறைவடைந்துள்ளது.

இதுவரை காலமும் 20 ரூபா தொடக்கம் 23 ரூபாவரை விற்பனை செய்யப்பட்டு வந்த முட்டை தற்போது 15 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. (203-160)

## 'பூமாமலர்' வெளியீடு

சுழிபுரம், பெப்.18

கீர்த்தனைகள் மற்றும் மெல்லிசை பஜனைப் பாடல்கள் அடங்கிய 'பூமாமலர்' என்னும் நூலை சுழிபுரம் கண்ணன் சிவன் அடியார்கள் வெளியிட்டுள்ளனர்.

இந்நூலில் 25 தலைப்புகளில் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. (202-28)

## நவாலியில் வெப்பத்தால் நோய் பரவுகின்றது

நவாலி, பெப்.18

தற்போது நிலவும் அதிக வெப்பம் காரணமாக நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதிகளில் காய்ச்சல், இருமல் போன்ற நோய்கள் பரவி வருகின்றன.

இவற்றிற்குச் சிகிச்சை பெறுவதற்காக நூற்றுக்கு மேற்பட்டவர்கள் தினமும் மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்திய சாலைக்குச் சென்று வருவதைக் காணமுடிகின்றது. (202-100)

# மூன்றாம் நிலைக் கல்வியைப் பெறமுடியாது வளரும் சந்ததியினர் விரக்திக்கு உள்ளாகின்றனர்

### தொழிற்பயிற்சியே பரிகாரம் என்கிறார் பேராசிரியர் கந்தசாமி

யாழ்ப்பாணம், பெப்.18



எமது சமூகத்தில் 90 சதவீதமான மாணவர்களுக்கு மூன்றாம் நிலைக்கல்வியைப் பெறும் வாய்ப்பு கிடைப்பதில்லை. இதனால் பல வளரும் சந்ததியினர் விரக்தி நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இந்த நிலையைப் போக்க தொழில்சார் பயிற்சிகளை வழங்கி தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி தெரிவித்தார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தின நிகழ்வு அண்மையில் கல்லூரி அதிபர் அ.கயிலாயப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

பாரதியார் எதிர்பார்த்த நல்லதொரு சமுதாயம் உருவாக்கப்பட வேண்டுமாயின் எமது கலாசாரத்தையும் பாரம்பரியத்தையும் மதித்துப் பேணுகின்ற இளம் சமுதாயம் எம்மத்தியில் உருவாக்கப்படல் வேண்டும்.

இன்று இளம் சமூகத்தினராக உள்ளவர்கள் இயல்பாகவே புத்திக்கூர்மையும் ஆற்றலும் உடையவர்கள். எதையும் மிக இலகுவாகக் கிரகிக்கும் ஆற்றல் உள்ளவர்கள். நினைத்ததைச் சாதிக்கும் உத்வேகமும் உள்ளவர்கள். காட்டாற்றைப் போல வேகமுள்ளவர்கள். ஆனால், இவர்களை நெறிப்படுத்தி வழிநடத்துவது காலத்தின் தேவையாகும்.

இன்றைய கல்வி முறையிலே இலங்கை வயதுக்குழும விகிதாசாரப்படி 2.4 சதவீத மாணவர்களே பல்கலைக்கழகக் கல்விக்குத் தெரிவாகின்றனர். அண்ணளவாக 10 வீத மாணவர்களே மூன்றாம் நிலைக் கல்வியைப் பெறும் வாய்ப்பைப் பெறுகின்றனர்.

மேலும் உயர்தரப் பரீட்சையில் சித்தி பெறும் மாணவர்களில் 15 வீதமான மாணவர்கள் தேசிய பல்கலைக்கழகமொன்றில் கல்வி பெறுகின்றனர். இந்த நிலைமை நாட்டின் அபிவிருத்திக்கு ஆரோக்கியமானதல்ல.

அதாவது மூன்றாம் நிலைக்கல்வியைப் பெறவேண்டிய 90 வீதமானவர்கள் எவ்வித வாய்ப்புமின்றி தமது குடும்பத்திற்கும் நாட்டுக்கும் பாரமானவர்களாக்கப்பட்டு விரக்தி நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இந்நிலையை மாற்றுவதற்கு வார இறுதி நாள்களிலும், விடுமுறை நாள்களிலும் தொழில்சார் பயிற்சி வகுப்புகளை நடத்துவதன் மூலம் விரக்தி நிலைக்குச் செல்லாமல் மாணவர்கள் தமது திறமைக்கேற்ற தொழிற்பயிற்சியைப் பெறமுடியும் - என்றார்.

இந்நிகழ்வில் ஆரோக்கியத்திற்கான கல்வியும் கல்விக்கான ஆரோக்கியமும் ஆரோக்கியமான கற்றலும் என்னும் பொருளில் நிறுவுநர் நினைவுப் பேருரையை வைத்தியக் கலாநிதி சி.எஸ். யமுனானந்தா நிகழ்த்தினார்.

கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் ஆசிரியரின் ஆக்கங்களை கொண்ட தாமோதரன் 104 ஆவது ஆண்டு மலர் இந்நிகழ்வில் வெளியிடப்பட்டது.

பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன் சஞ்சிகையை வெளியிட, கல்லூரியின் முன்னாள் அதிபர் க.மகேஸ்வரன் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார். (202-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்... நிகழ்வுகள்...



யாழ்.ஆரியகுளத்தில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் அண்மையில் நடமாடும் இரத்ததான முகாம் இடம்பெற்றது. இதில் மாணவர் ஒருவர் இரத்த தானம் செய்த போது எடுக்கப் பட்ட படம். (203)



காக்கைதீவு கிராம மட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவின் வேண்டுகோளுக்கிணங்க சிறுவர் பாதுகாப்பு நிதியம் வழங்கிய விளையாட்டு உபகரணங்களை ஆனைக்கோட்டை கிராம அலுவலர் வை.சந்திரராஜா சிறுவர்களுக்கு வழங்குவதையும் அருகில் சிறுவர் பாதுகாப்பு நிதிய உத்தியோகத்தர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:லக்ஸ்மன்)



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினரால் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன. பயனாளி ஒருவருக்கு பேராசிரியர் எஸ்.சிற்றம்பலம் சைக்கிளை வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். (218)




இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பொன் விழாவையொட்டி அண்மையில் பருத்தித்துறை டிப்போவில் பொன்விழா நிகழ்வு இடம்பெற்றது. பருத்தித்துறை சாலை முகாமையாளர் ரி.யோகநாதன் நிகழ்வில் தலைமை வகித்து உரையாற்றுவதையும் சாலை உதவி முகாமையாளர் சு.கணேஸ்வரன், பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஸ்ண சாரதா சேவாச்சிரமத் தலைவர் சுவாமி சித்ருபானந்தா, பருத்தித்துறைச் சாலைப் பொறியியலாளர் பி.தங்கராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (218)



வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் குருளை சாரணர்களுக்கு சின்னம் சூட்டும் விழா அண்மையில் நடைபெற்றது. சாரணிய உதவி மாவட்ட ஆணையாளர் திருமதி கை.பவானி மாணவர் ஒருவருக்கு சின்னம் சூட்டுவதைப் படத்தில் காணலாம். (135)

# இறைவன் உன் மீது பேரன்பு காட்டுகின்றார்

இறைவனின, கட்டளைகளின படி நடப்பவர்களுக்கு இறைவன் பேரன்பு காட்டுகின்றார் என்பது உண்மையே.

நாம் மற்றவர்களில் பழி போடாமல், தீர்ப்பளிக்காமல் இருக்கப் பழகியிருக்கிறோமா? கண்டனம் செய்யாமல இருக்க, மன்னிப்புக் கொடுக்கவும் மன்னிப்புப் பெறவும் பழகியிருக்கிறோமா? எதையும் எதிர்பார்க்காமல் கொடுத்திருக்கிறோமா? மிகவும் தெளிவாக ஆண்டவர் சொல்கின்றார் எந்த அளவையால் அளப்பீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப் படும்.



ஒரு சிறிய சம்பவம். அது ஒரு மகிழ்ச் சிகரமான மாலைப்பொழுது. அந்தக் குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் நண்பர்களும் பங்களாவின் முன்பிருந்த புற்றரையில் மகிழ்வுடன் கூடியிருந்தார்கள். அலுமாரியினுள் மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த விலையுயர்ந்த அழகான தேநீர்க் கோப்பைகளை விழாவுக்காக வெளியே எடுத்து வைத்தார் அந்தத் தாயார். ஆம், அன்றைய நாள் அந்தக் குடும்பத்தின் பெற்றோரின் திருமண நினைவு நாள். எல்லாமே இனிதாக நடைபெற்றுக் கொண்டிருக்கையில் நண்பர்களுடன் கூடிக் குதூகலித்துக் கொண்டிருந்த மகன்களின் ஒருவருக்கு அந்த தேநீர்க் கோப்பைகளைக் கொண்டு வரும்படி தாயார் சைகைசெய்தார். சைகையின் பொருளை உணர்ந்தவனாக அந்த தேநீர்க் கோப்பைகளை எடுத்து வந்தான். வரும் பொழுது மிகுதியான மகிழ்ச்சியில் இருந்ததினால் சிறிது கவனயீனமாக ஒரு படியைத் தவற விட்டுத் தடுமாறினான். இந்தப் பதற்றத்தில் தேநீர் கோப்பைகள் கீழே விழுந்து உடைந்து சிதறின.

இப்பொழுது என்ன செய்வது? திகைத்தான். தர்யை நினைத்தான், பயந்தான். அம்மா என்னை வார்த்தைகளால் கொல்லப்போகிறாளே என்று மனதினுள் நடுங்கினான். தேநீர்க் கோப்பைகளின் அழகும் பெறுமதியும் மனதினுள் வந்தது. கலங்கிவிட்டான். மெதுவாக எல்லாச் சிதறல்களையும் பொறுக்கியெடுத்த பின் தாயிடம் சொல்ல முடிவு செய்தான். மெதுவாகப் போய் மனதில் துணிவை வரவழைத்து நடந்ததைச் சொன்னான். தாய் எதுவும் சொல்லவில்லை. அமைதியாக இருந்தாள். தாயின் அமைதி மகனுக்கு வியப்பாக இருந்தது. தாய் பரிவுடன் மகனிடம் 'இதனால் உனக்குக் காயம் ஏதும் ஏற்படவில்லையா மகனே' என்று கேட்டாள். மகன் 'இல்லை' என்று பதிலளித்தவுடன் அந்த அன்பான தாய் கூறினாள் 'அது போதும் என் மகனே, தேநீர் கோப்பைகளைத் திரும்பவும் வாங்கலாம். ஆனால், உன்னை நான் வாங்க முடியாதே. பொருள்களைவிட நீ எனக்கு மேலானவன், பெறுமதியானவன்' என்று.

- எச்.சி. மரீனா.

## மக்கள் மாண்பு மக்கள் மாண்பு

# பண்ணிசைக் கலாமணி சம்பந்தன்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளின் பெரும்புகழைப் பாடுகின்ற தேவாரத் திருமுறை சைவ மக்களின் பொக்கிஷம் தேவாரம். அத்தகைய அரும்பெரும் தேவாரத் திருமுறையை, முறையாக ஓதுகின்ற வல்லமை மிக்கவர் தாவடியூர் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தன் ஆவார்.



பண்ணிசையைப் பக்குவமாய் இசைத்து எல்லோருடைய உள்ளத்திலும் இடம் பிடித்துக் கொண்டுள்ளவர் தேவார இசைமணி. தந்தை எவ்வழி மைந் தன் அவ்வழி என்பதற்கிணங்க திருஞானசம்பந்தன் ஒரு தலை சிறந்த ஓதுவாராகத் திகழ்கின்றார்.

தேவாரம் வேதசாரம். எனவே அது வழுவின்றி ஓதப்பட வேண்டும்; பண்ணோடும் ஓதப்பட வேண்டும். அந்தவகையில் திருமுறை ஓதுவதையே தொழிலாகக் கொண்டுள்ள இவர் ஈழத்தில் மட்டுமல்ல இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், லண்டன் முதலான இடங்களுக்கும் சென்று திருமுறை ஓதும் கச்சேரிகளும் செய்து பலரது பாராட்டுக் களையும் பெற்றுள்ளார்.

திருப்பனந்தாள் திருமுறைக் கலாநிதி முத்துக்குமாரசாமி தேசிகரிடம் முறையாகப் பயிற்சி பெற்ற இவர் 1999 இல் கைதடி சச்சிதானந்த ஆச்சிரமத்தால் ''அருளிசையரசு என்றும், இந்து கலாசார அமைச்சினால் 'கலை ஞானகேசரி ' என்றும், 2002 இல் கொழும்பு சர்வதேச இந்து மத குரு பீடத்தால் 'பண்ணிசைக் கலாமணி' என்றும், இந்துப் பேரவையினால் 'சிவகலாபூஷணம்' என்றும், இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 'கலாபூஷணம்' என்றும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டுள்ளார்.

இவரது தித்திக்கும் குரலில் 'தேவாரத் திருமுறைத் தேனமுதம்' ஒலித்தட்டும் வெளிவந்துள்ளது. தேவாரத் திருப்பதிகங்களை இசை நுணுக்கங்களுடன் தேனாறு பாய்ந்தது போல் இனிமையைத் தருமாறு ஓதுபவர். இவர் பணி பாராட்டுக்குரியது.

- இராசையா ஸ்ரீதரன்

# டாக்டருக்கான அதிசிறப்புத் தகைமை பெற்றவர்



செல்வி சுப்பிரமணியம் ரேணுகா வைத்திய கலாநிதி பட்டத்தை அதிசிறப்புத் தகைமையுடனும் மூன்று தங்கப்பதக்கங்களைப் பெற்றும் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

கண்டி பேராதனைப் பல்கலைக்கழக சபா மண்டபத்தில் இடம் பெற்றபட்டமளிப்பு விழாவில் இவருக்கான தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கனிஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றி ஐக்கிய ராஜ்யம், அமெரிக்கா, வாஷிங்டன் அரச பல்கலைக்கழகத்திற்கு மேலாண்மைக் கல்வியைத் தேடிக்கற்றுத் தேர்ச்சியடைவதற்கான புலமைப்பரிசில் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சென்றுள்ளார்.

இவர் யாழ்.வேம்படி உயர்தரப் பெண்கள் பாடசாலை, கொழும்பு இந்து மகளிர் கல்லூரி ஆகியவற்றின் (சைவமங்கையர் கழகம்) பழைய மாணவியுமாவார்.

இவர் கைதடி வடக்கைச் சேர்ந்த ஆ.சி சுப்பிரமணியம் - இராஜேஸ்வரி தம்பதிகளின் புதல்வியாவார்.

# தன்னலம் கருதாத சேவகி

வேலணைப் பிரதேச சபையின் புங்குடுதீவு உப அலுவலகத்தின்கீழ் இயங்கிவரும் முன்பள்ளியில் 1977 ஆம் தொடக்கம் 2008 ஆம் ஆண்டுவரை 31 வருடங்களாகக் கடமையாற்றிவரும் ஆசிரியை திருமதி தங்கராஜா கமலாதேவி தற்போது ஓய்வு பெற்றுள்ளார்.



இவருக்கு அண்மையில் வேலணைப் பிரதேசசபை மண்டபத்தில் வைத்து பிரதேசசபை நலன்புரிச் சங்கத்தினர், புங்குடுதீவு, நயினாதீவு, மண்டைதீவு, அல்லைப்பிட்டி உப அலுவலக ஊழியர்கள் ஒன்றிணைந்து பாராட்டு விழாவை நடத்தியுள்ளனர்.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும், போக்குவரத்துக் கஷ்டங்களுக்கு மத்தியிலும் இவர் கடமை புரிந்து வந்துள்ளமை பாராட்டத் தக்கவிடயம் எனப் பாராட்டு விழாவின்போது தெரிவிக்கப்பட்டது.

தன்னலம் கருதாது சிறார்களின் எதிர்காலத்தில் அக்கறையுடன் இவர் செயற்பட்டு வந்துள்ளார். இவரது முயற்சியால் எத்தனையோ சிறார்களின் எதிர்காலம் வளமானதாக அமைந்துள்ளது. இவர் தனது ஓய்வுக்காலத்தில் சீருடனும் சிறப்புடனும் வாழவேண்டும் என்று பாராட்டு நிகழ்வில் வாழ்த்தப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்தங்கிய பிரதேசமானாலும் க.பொ.த. உயர்தரத்தில் சாதனை



பாடசாலை அதிபர் பொன்னுத்துரை சிவராசா

யாழ்.மாவட்டத்தில் கல்வியில் பின் தங்கிய பிரதேசங்களில் ஒன்றாக வடமராட்சி கிழக்குப் பிரதேசம் இருந்து வருகிறது. கஷ்டப் பிரதேசம் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட இப்பிரதேசத்தில் விடுவிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கின் மேற்குப் பகுதியில் வளங்கள் இன்றி இயங்கிவரும் அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் க.பொ.த. உயர்தர கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டு கடந்த 2007 வரையான மூன்று ஆண்டு காலப் பகுதியில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் அனைவருமே சித்தியடைந்து சாதனை நிலைநாட்டியுள்ளனர். அதிலும் விசேடமாக கடந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிவதாஸ் நிலோஜன் என்ற மாணவன் மூன்று பாடங்களிலும் 'ஏ' தரச் சித்தி பெற்று அதிவிசேட சாதனையைப் படைத்துள்ளான். வடமராட்சி கிழக்குப் பிரதேச பாடசாலைகள் எதிலும் மிக நீண்ட காலத்தில் இதுபோன்ற சாதனைகள் இடம்பெற்றதில்லை என்று கூறலாம்.

இச்சாதனையாளன் சிவதாஸ் நிலோஜன்



பாடசாலைக் கட்டடம் ஒன்று



தெரிவித்ததாவது-

எனது சொந்த இடம் அம்பனுக்கு அருகில் உள்ள நாகர்கோயில் பகுதியில் உள்ள குடாரப்பு எனும் மிகச்சிறிய கிராமமாகும். தற்போது இடம்பெயர்ந்து குடத்தனை கிழக்கில் வசித்து வருகிறேன்.

நான் தரம் 8 தொடக்கம் க.பொ.த. உயர்தர வகுப்பு வரை அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்வி கற்றேன். எனது அப்பா சாதாரண ஒரு விவசாயி. எனக்கு மூன்று தங்கையர்களும், ஒரு தம்பியும் இருக்கின்றனர். நான் அம்மா, அப்பாவின் கடும் முயற்சியினாலும் அன்பினாலும் தான் இந்தச் சாதனையை நிகழ்த்த முடிந்தது.

**"அதிபர், ஆசிரியர்களுக்கு எனது நன்றிகள்"**

நான் இன்று இந்த நிலையை அடைவதற்கு எனது கடும் முயற்சியும் ஆசிரியர்களின் ஒத்துழைப்புமே காரணம். எனது அப்பா தொடர்ந்தும் கஷ்டப்படக் கூடாது என்ற எண்ணம் என்னை மீண்டும் சிந்திக்கத் தூண்டியது.

நான் இந்த வெற்றியை அடைவதற்கு பாடசாலையே முதற்காரணம் எனலாம். அந்த வகையிலே நான் எனது அதிபருக்கு நன்றியைக் கூறுகிறேன். அவரது புத்திமதிகள் ஒவ்வொன்றும் என்னைச் சிந்திக்க வைத்தன. அடுத்த படியாக எனக்குப் பாடம் கற்பித்த ஆசிரியர்கள் அயராது உழைத்துள்ளார்கள். நான் கற்பதற்கு எவ்வளவோ உதவிகளைச் செய்தார்கள்.

குறிப்பாக எனது வீட்டில் மின்சாரம் இன்மை காரணமாக நான் இரவு நேரங்களில் திருச்சபை வளாகத்தில் இருந்தே கல்வி கற்றேன். அதற்கு உதவியாக ஆசிரியர்கள், திருச்சபையின் குருவானவர் ஆகியோரும் எனது வெற்றிக்கு உரித்துடையவர்கள் ஆவார்கள்.

எமது பாடசாலை இருக்கும் இடம் ஒரு பின்தங்கிய பிரதேசம். அங்கு மின்சார வசதிகள் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனை நாம் கருத்திற் கொண்டு எமது பாடசாலையிலும் கல்வி நிலையத்திலும் கல்வி பயிலும் ஒவ்வொரு மாணவர்களையும் தொடர்ந்தும் தமது கல்வியை மேற்கொண்டு பெரும் வெற்றியை பெறவேண்டும் என்று விரும்புகிறேன் எனக் கூறினார்.

இப்பாடசாலை அதிபர் பொ.சிவராசா கூறியதாவது:-

**பாடசாலையின் வரலாறு**

வடமராட்சி கிழக்குப் பகுதியில் அம்பன் என்னும் கிராமத்தில் அமெரிக்க மிஷனரியினால் 1935 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதே அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகும். இப்பாடசாலை அம்பன் கிராம வாசியான நல்லதம்பி என்பவருடைய ஒரு பரப்பு வயற்காணியில் 20'X30' அளவிலான ஒரு சிறிய கட்டடத்துடன் ஆசிரியர் ஒருவருடனும் 15 மாணவர்களுடனும் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது தரம் 5 வகுப்பு வரையான வகுப்புக்களே நடைபெற்றன.

## அதிபர், ஆசிரியர் மதிப்பை உயர்த்திய அம்பன் அ.மி.த.க. பாடசாலை மாணவர்கள்

பின்னர் 1960 ஆம் ஆண்டு தரம் 8 வரை வகுப்புக்களைக் கொண்டதாக வளர்ச்சி கண்டது. அயலவர்கள் வழங்கிய 2 பரப்புக் காணியில் 60'X20' அளவிலான மற்றொரு சிறிய கட்டடம் அமைக்கப்பட்டு, வகுப்புக்கள் நடைபெற்றன. ஆசிரியர்களும் மூன்று பேராக அதிகரிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து 1991ஆம் ஆண்டில் இப்பாடசாலையில் க.பொ.த சாதாரண தர வகுப்புக்களைக் கொண்டதாக தரம் உயர்ந்தது. அவ்வேளை 100'X20' அளவிலான தற்காலிக மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வகுப்புகள் நடைபெற்றன.

அக்காலப் பகுதியில் குடத்தனை கிராம சபைப் பிரதேசத்தில் (தற்போது பிரதேச சபை - உப அலுவலகம்) இப்பாடசாலையுடன் சேர்ந்து ஏழு பாடசாலைகள் இருந்தன. அவற்றுள் ஐந்து பாடசாலைகள் க.பொ.த. சாதாரண தர வகுப்புகளைக் கொண்டவையாக விளங்கின. எனினும் இப்பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் க.பொ.த. சாதாரண பொதுப் பரீட்சை எழுதுவதற்கும் உயர் கல்வியைப் பெறுவதற்கும் ஏறத்தாள 16 கிலோ மீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ள வடமராட்சி மத்திய பிரதேசத்துக்கு செல்லவேண்டி இருந்தது. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை எப்பொழுதும் டிசெம்பர் மாதத்தில் நடைபெறுவதால் மழை காரணமாக பரீட்சை நிலையங்களுக்கு மாணவர்கள் போய்வருவதற்கான போக்குவரத்து சீரின்மை காணப்பட்டது.

இந்த நிலையில் இப்பகுதி மக்கள் நலனில் அக்கறையுள்ள வடமராட்சி கிழக்கின் அன்றைய கோட்டக் கல்விப் பணிப்பாளரின் கடும் முயற்சியினால் இப்பாடசாலை 1998 ஆம் ஆண்டிலிருந்து க.பொ.த. சாதாரண தர பரீட்சை நிலையமாக விளங்கி வருகிறது. வருடந்தோறும் 75 இற்கு மேற்பட்ட (ஏனைய பாடசாலை மாணவர்கள் உட்பட) மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றி வருகிறார்கள்.

இவர்களுள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் வடமராட்சியின் மத்திய பகுதியில் உள்ள உயர்தரப் பாடசாலைகளில் கல்வி கற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையே காணப்பட்டது. இவர்களின் போக்குவரத்து, தங்குமிடம் என்பனவற்றிற்கு அதிக பணம் செலவிடவேண்டிய தேவை காணப்பட்டதோடு அந்தச் செலவை ஈடுசெய்யக்கூடிய குடும்ப பொருளாதாரப் பின்னணி அவர்களில் பலருக்கு இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும்உயர்தர பாடசாலைகளில் தற்போது தங்குமிட விடுதிகள் இல்லாத காரணத்தால் உறவினர்கள், நண்பர்களின் வீடுகளில் தங்கியிருந்து கல்வி கற்கின்ற போதும் மாணவர்கள் பல்வேறு பிரச்சினைக்கு முகம்கொடுக்கவேண்டிய இக்கட்டான நிலை காணப்பட்டது.

**கல்வியைத் தொடர முடியாத மாணவர்கள்**

இப்பகுதியில் வாழ்பவர்களில் அநேக மானவர்கள் விவசாயம், மீன்பிடித் தொழில்களையே ஜீவனோபாயமாகக் கொண்டவர்கள். நாளாந்த வாழ்க்கைச் செலவையே சமாளிக்க முடியாமல் திண்டாடும் இவர்களே பிள்ளைகளின் உயர் கல்விக்காக அதிக பணத்தை செலவிடுதல் கடிமானதாகவே காணப்படுகிறது. இதனால் மாணவர்கள் பலர் உயர் கல்வியைத் தொடரமுடியாமல் க.பொ.த. உயர்தர வகுப்பில் படிக்கமுடியாமல் பரீட்சை எழுதமுடியாத வாய்ப்பை இழக்கும் நிலைக்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். அவற்றைக் கருத்திற் கொண்டு இக்கிராம வாசியான மு.நகுலராசா கடந்த 2003 ஆம் ஆண்டு எடுத்த கடும் முயற்சியின் பயனாக இப்போதைய கல்விப் பணிப்பாளரின் தற்காலிக அனுமதியோடு இப்பாடசாலையில் க.பொ.த. உயர்தர கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் பத்து மாணவர்களுடனும் குறைந்த பௌதீக ஆசிரிய வளத்துடனும் வகுப்புகள் நடைபெற்றன.

இந்நிலையில் பெற்றோர்கள் 14 பரப்புக் காணியை விலை கொடுத்து வாங்கி பாடசாலைக்கு அன்பளிப்பாகத் தந்தனர். இக் காணியில் 70'X25' அளவுடைய மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சிறுவர் பாதுகாப்பு நிதிய அனுசரணையால் 100'X20' அளவுடைய தற்காலிக் மண்டம் நிரந்தரக் கட்டடமாக அமைக்கப்பட்டது. அத்தோடு 200' நீளமான சுவரும் அமைக்கப்பட்டது. உலக தரிசன நிறுவனத்தின் ஆதரவோடு அமைக்கப்பட்ட சமையல் அறை, சிறிய விளையாட்டு மைதானம் என்பவற்றையும் கொண்டு எமது பாடசாலை விளங்குகின்றது.

எமது பாடசாலையில் க.பொ.த. உயர்தர கலைப்பிரிவு தற்காலிகமாக ஆரம்பிக்கப்பட்டு மூன்று தடவைகள் பரீட்சைகள் நடை





பெற்றுள்ளன. மூன்று தடவைகளில் தோற்றிய மாணவர்கள் நூறு சதவீதம் சித்தியடைந்துள்ளனர். இம்முறை மாணவன் நிலோசன் 3ஏ சித்திகளைப் பெற்று சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

**பாடசாலையின் மதிப்பை உயர்த்திய மாணவர்கள்**

எமது பாடசாலையில் க.பொ.த உயர்தர வகுப்பில் கலைப்பிரிவில் அனுமதி பெற்று கல்வி கற்பவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெறாதவர்கள். க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் ஆகக்குறைந்த சித்தி வீதத்தைக் கொண்டவர்கள்தான். ஆனால், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தோற்றும் அனைத்து மாணவர்களும் சித்தியடைகிறார்கள். அதுமட்டுமல்லாது சி. நிலோஜன் 3ஏ, வே. கோகலா 2ஏபி, ப. பிரதீபன் 2ஏபி, த. ஐங்கரதீபன் 2ஏபி போன்ற உயர் பெறுபேறுகளைப் பெற்று பாடசாலையின் மதிப்பை உயர்த்தி இருக்கிறார்கள். அத்தோடு அவர்கள் கற்பதற்கு உதவி புரிந்த ஆசிரியர் அத்தோடு, அவர்கள் கற்பதற்கு உதவி புரிந்த ஆசிரியர்கள், பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறையோடு செயற்படும் பாடசாலைச் சமூகம் ஆகியோரை மட்டற்ற மகிழ்ச்சியில் ஆழ்த்தியதோடு, அவர்களது சேவையினையும் வீச்சாக்கியுள்ளார்கள்.



'3 ஏ' சித்திபெற்ற சி.நிலோஜன்

**பழைய மாணவர் உதவி**

மாறிவரும் கல்வியுலகிற்கு ஏற்ப இப்பகுதி மாணவர்களுடைய தேவையும் நிறைவு செய்தல் அவசியமாகிறது. மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத்தின் திறன்களை அறிந்து கொண்டு போட்டி மிக்க உலகில் தம்மையும் நிலைநாட்டிக் கொண்டு முகம் கொடுப்பதற்கு ஆவன செய்யும் வகையில் இப்பாடசாலையின் பழைய மாணவரான

**கர்ணன்**

குணசிறி என்பவரால் ஐந்து கணனிகளும் அதற்குத் தேவையான உபகரணங்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றைப் பயன்படுத்துவதற்கான மின்சாரம் பாடசாலையை எட்டிப் பார்த்துக் கொண்டு ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் நிற்கிறது. சம்பந்தப்பட்டவர்கள் எமது பாடசாலைக்கும் அந்த மின்சாரம் கிடைப்பதற்கு ஆவன செய்து தருவார்களானால் இப் பகுதி மாணவர்களும் போட்டி மிக்க இந்த உலகில் தகவல் தொழில் நுட்பத் திறன்களை வளர்த்துக் கொண்டு வெற்றியடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

21 அதிபர்கள், பல ஆசிரியர்களின் கல்விப் பணியுடனும் பெற்றோர், நலன் விரும் பிகளினதும் ஒத்துழைப்புகளும் அத்திவாரமாக நிற்க, பல தடைகளையும் தாண்டி, பல சாதனைகளையும் , வெற்றிகளையும் நிலைநாட்டி வரும் இப்பாடசாலைக்கான மின்சாரத் தேவையும், விளையாட்டு மைதான விஸ்தரிப்புக்கு அருகில் உள்ள காணியைப் பெற்றுக் கொள்ளும் தேவையும் பூர்த்தி செய்யப்படும் பட்சத்தில் எமது பாடசாலை உயர்ந்து/விளங்கும் என் பதை 2010 ஆம் ஆண்டில் பவள விழா காணப்போகும் இந்த தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன் - என்றார் அதிபர்.

*

### நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயமே சரியானதாகும்

இம்மாதம் 7ஆம் திகதி வெளியான 'கல்விப் புனல்' பகுதியில் வெளியான செய்திக்கட்டுரை நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம் சம்பந்தமானது. அக்கட்டுரையின் தலைப்பில் அரியாலை மகேஸ்வரி வித்தியாலயம் என தவ றாகப் பிரசுரமாகிவிட்டது. அதனை நாயன் மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம் என்று கொள்ளவும். அந்தத் தவறினால் பாடசாலை சமூகத்துக்கு ஏற்பட்ட மனத் தாங்கலுக்காக வருந்துகிறோம். (ஆ-ர்)



நவாலி மகாவித்தியாலயத்தில் தலைமைத்துவ பயிற்சி மற்றும் கல்வி மூலம் தெரிந்து எடுக்கப்பட்ட மாணவர் தலைவர்களுக்கு சின்னம் சூட்டி, சான்றிதழ் வழங்கும் விழா பாடசாலை அதிபர் இ.வசந்தகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட சண்டிலிப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி சி.கந்தசாமி மாணவ முதல்வனுக்கு சின்னஞ்சூட்டுவதனையும், அருகில் பாடசாலை அதிபர் நிற்பதையும் படத்தில் காணலாம். (95)




சுழிபுரம் ஐக்கியசங்க சைவ வித்தியாசாலையில் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவின் போது மாணவர்கள் இருவர் விநாயகர் வழிபாடு கலை நிகழ்வு நிகழ்த்திய போது எடுக்கப்பட்ட படம். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத நினைவுகளுடன் பதினைந்து வருடம்

மண்ணில் 06 ✱ 06 ✱ 1929



விண்ணில் 18 ✱ 02 ✱ 1993

### அமரர் நீக்கிலாப்பிள்ளை சூசைமுத்து

(மயிலிட்டி)

ஆயிரம் உறவுகள் இருந்தாலென்ன
ஆயிரம் துன்பங்கள் வந்தாலென்ன
வருடங்கள் பல கடந்தாலென்ன
எம்மைத்தாங்கி அரவணைத்து
ஆறுதல் அளிக்க நீங்கள் இல்லையே
உம் சீவியத்தில் நேசித்தோம்
மரணத்திலும் மறவோம்.

இல. 117, தேவாலய வீதி,
யாழ்ப்பாணம். [71030]

மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

960 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கன்னி **05 28 29 40**

15-02-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 5508244 - 5523654

ஜக்பொட் பரிசு ரூபா. 1,757,250/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 338,777 | 10/- | 3,387,770/- |
| 2 இலக்கங்கள் | 31,191 | 20/- | 623,820/- |
| 1 இல. + லக்கினம் | 30,777 | 30/- | 923,310/- |
| 2 இல. + லக்கினம் | 2,795 | 100/- | 279,500/- |
| 3 இலக்கங்கள் | 823 | 500/- | 411,500/- |
| 3 இல. + லக்கினம் | 84 | 5,000/- | 420,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,757,250/- | 1,757,250/- |
| மொத்தம் | | | 8,103,150/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 404,456 | | 9,126,650/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இலக்கம் 4626832 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 பெப்ரவரி 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தளை | 5520740-7-70 |
| அம்பாறை | 5519513-7-70 |
| காலி | 5521087-2-32 |
| மட்டக்களப்பு | 5523260-5-96 |
| மாத்தறை | 5509291-3-84 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

## சரவணை கிழக்கில் இன்று வயல் விழா

யாழ்ப்பாணம், பெப்.18

வேலணை, சரவணை கிழக்கு கிருபானந்தர் தோட்டத்தில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ் விவசாயத் திணைக்களத்தால் 'சோளச் செய்கையும் மிளகாய்ப் பயிரில் இலைச் சுருள் முகாமைத்துவமும்' என்னும் தலைப்பில் வயல் விழா நிகழ்வு இடம்பெறவுள்ளது.

யாழ். பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் கலந்து கொள்வார். (203)

## சமூக அபிவிருத்தி மன்றத்தால் வாழ்வாதாரப் பணிகள் முன்னெடுப்பு

வலி.தென்மேற்கு, பெப்.18

யாழ்.சமூக அபிவிருத்தி மன்றம் யாழ். மாவட்டத்தில் செயற்படும் சமூக அபிவிருத்தி மன்றக் கிளைகள் ஊடாக மன்ற உறுப்பினர்கள் வாழ்வாதாரத்தை அதிகரிக்கும் பல்வேறு வேலைத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

நல்லூரிலுள்ள மன்ற தலைமைப் பணிமனைக் கட்டடத்திலும் புத்தூர், அச்சுவேலி ஆகிய மன்றக் கிளைகளிலும் யுவதிகளுக்கான 6 மாதகால தையல் பயிற்சி நெறி நடத்தப்பட்டு வருகின்றது. மன்ற உறுப்பினர்களுக்குத் தையல் இயந்திரங்களும் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, மன்ற உறுப்பினர்களின் பிள்ளைகளான பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள் வாங்குவதற்கான கடன் வசதிகளையும் வழங்கி வருகின்றது.

மன்ற உறுப்பினர்களுக்கு சுய தொழில் முயற்சிக் கடனும் வழங்கப்பட்டு வருகின்றது. இவ் வருடத்தில் மன்ற உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கு முகமாக மேலும் பல வேலைத் திட்டங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக மன்றத்தின் புதிய தலைவராக பதவி ஏற்றுள்ள திருமதி ஜெபமணி யோசவ் தெரிவித்தார். (202-135)

### தவறிவிட்டது

ஜெயராஜா மைதிலி என்பவருடைய தே.அ.அட்டை (இல.865892349V) நாவலர் வீதிக்கும் கோப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 196/A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். [71208]

### விற்பனைக்கு

பிறீமா கோழித்தீன் வகைகள் விற்பனைக்குண்டு.
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
M.L &.Co
235, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P. 222 2506
மொத்தக் கொள்வனவிற்கு விசேட கழிவு உண்டு.

### THE ROYAL COLLEGE OF JAFFNA

சுலபமான முறையில் ஆங்கிலத்தில் எழுத, வாசிக்க, கதைக்கப்பயில By: ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), K.K.S.வீதி, யாழ்ப்பாணம் பிளாக் வீதி, சங்கானை.
[71209] "THE ROYAL IS THE BEST"

### MATHAN ELECTRONICS

✱ சகலவிதமான TVகளும் உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும்.
✱ Sony TV கள் 21" KV 2183, KV 2184, KV 2185, G 21 போன்றன விற்பனைக்கு உண்டு (ஒரு வருட உத்தரவாதம் வழங்கப்படும்)
மதன் எலக்ரோனிக்ஸ், சுதுமலைச் சந்தி, மானிப்பாய்.
தொ.பே. 0776699623, 0776571156.

## மெய்வன்மைப் போட்டிகள்

மட்டுவில் கமலாசினி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் செ. பேரின்பநாதன் தலைமையில் இடம் பெறவுள்ளன.

நிகழ்வில் தென்மராட்சி வலய தொழில் நுட்ப உத்தியோகத்தர் வே. பாராளன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.


✱ ✱ ✱

கட்டைவேலி, பெப்.18

அம்பன் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் பொ. சிவராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் நெல்லியடிக் கிளை முகாமையாளர் வி. தில்லைநாதன் கலந்து கொள்வார். (203-275)

## நினைவஞ்சலி





அமரர்
**தசாவதானம் ஞானசேகரம்**
(முன்னாள் ப.நோ.கூ.ச.கிளை முகாமையாளர்)

அமரர்
**சின்னத்தம்பி நாகலிங்கம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)


தோற்றம் 08.01.1934 மறைவு 19.01.2008 தோற்றம் 27.02.1917 மறைவு 20.01.2008

எமது பாடசாலை ஆசிரியர்களான திருமதி K.சூரியகுமார் அவர்களின் தந்தை தசாவதானம் ஞானசேகரம் அவர்களினதும் திருமதி S.சொர்ணலிங்கம் அவர்களின் மாமன் சின்னத்தம்பி நாகலிங்கம் அவர்களினதும் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரது குடும்பத்தினருக்குத் தெரிவிப்பதுடன், அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மீசாலை மேற்கு,
மீசாலை. (71203)

யா/மீசாலை
விக்கினேஸ்வர ம.வி. சமூகம்.

## ஈர விழிகளுடன் 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**அருணாசலம் நடராசா**

தோற்றம் 18.10.1930

மறைவு 19.01.2008

அன்பின் உறைவிடமே
எங்கள் குடும்பத்தின் சிகரமே
பழக இனியவரே பண்பிலே சிறந்தவரே
எம்மை அன்பால் அரவணைத்து
நல்வழிகள் பல காட்டியவரே
எம் உயிர் உள்ளவரை
உங்களை மறவோம் நாம்.

இன்று (18.02.2008) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (71144) குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/தேவரையாளி இந்துக் கல்லூரி, கரவெட்டி

எமது பாடசாலையில் க.பொ.த (உ/த) பரீட்சையில் 2006ஆம், 2007ஆம் ஆண்டுகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற பின்வரும் மாணவர்களாகவும்

**2006 ஆம் ஆண்டு**

01. செல்வன் செ.ரஜீவன் - 3A
02. செல்வி த.சுவர்ணமுகி - 2A, B
03. செல்வி ர.ராஜிதா - B, 2C
04. செல்வன் ம.தர்மரொபின்சன் - 2B, C

**2007 ஆம் ஆண்டு**

01. செல்வி சு.சுவறாசினி - 3A
02. செல்வன் யோ.சுஜீந்திரன் - 2A, C
03. செல்வன் அ.துவாரகன் - 2A, B
04. செல்வன் த.சுஜீவன் - 2A, B

இவர்களுடன் சித்தியடைந்த ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/தேவரையாளி இந்துக் கல்லூரி. (71171)

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மன்னார், வலைப்பாட்டில் சங்கமமான

திருச்செல்வம் கமலேந்திரராணி (குமுதினி) தோற்றம்: 23.06.1974

திருச்செல்வம் கம்சினி தோற்றம்: 05.06.1996

சிவலிங்கம் திருச்செல்வம் தோற்றம்: 08.02.1972

மறைவு: 19.02.1997

ஆண்டுகள் பதினொன்று ஓடிவிட்டன. தம்பி எங்களால்
உங்கள் புன்சிரிப்பையும் ஆறுதலையும் மறக்கமுடியவில்லை
கடைசிவரை துணை என நாங்கள் நம்பி வாழ்ந்தோம்
நடுவழியில் எங்களைத் தவிக்கவிட்டு எவ்விடம் சென்றீர்கள்?

உங்கள் அன்பு முகம் காணாமல் தவிக்கின்றோம்
எங்கள் மனம் வேதனையால் நொந்து கொண்டே இருக்கின்றது
... மூழ்கி துடியாய்த் துடித்தீர்களோ?
நீங்கள் இல்லாத உலகில் நிம்மதி ஏது? (71174)

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
ஐயா, அம்மா, அக்கா,
அத்தான், மருமக்கள்,
அண்ணன்மார்
ஸ்ரீரங்கம், திருப்பதி.

தகவல் க.சிவலிங்கம்
கதிரிப்பாய், அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மனித உரிமைகள் தொடர்பில் சர்வதேசத்தின் கவனம் ஈர்ப்பு

விடுதலைப் புலிகளைப் பூண்டோடு அழித்து அதன் மூலம் இனப்பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க முடியும் என மனக்கோட்டை கட்டியுள்ள கொழும்பு அரசு, அதற்குத் தனக்குத்தானே விதித்துக்கொண்ட காலக்கெடுவை, முன்னைய அரசுகளைப் போலவே மெல்ல மெல்லப் பின் நோக்கி நகர்த்துகின்றமை குறித்து சில தினங்களுக்கு முன்னர் இப்பத்தியில் ஆராய்ந்தோம். இந்த ஓகஸ்டில் இருந்து அடுத்தவருட இறுதிக்கு இப்போதைக்கு யுத்தத்தின் முடிவு காலத்துக்கான கெடு தள்ளிப்போடப்பட்டிருக்கின்றது. இன்னும் எவ்வளவு காலத்துக்கு இப்படியே இது வழுவி - நழுவி - பின்நகரும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

புலிகளுக்கு எதிரான தீவிர யுத்தத்தில் கொழும்பு வெறிகொண்டு நிற்கையில், இலங்கையின் நிலைமையை நேரில் கண்டறிந்து தமக்கு அவதானிப்பு அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்காகத் தமது விசேட பிரதிநிதி ஒருவரை ஐ.நா.செயலாளர்நாயகம் பான் - கீ - மூன் நேரடியாக இலங்கைக்கு அனுப்புகின்றார்.

அரசியல் விவகாரங்களுக்கான தனது உதவிச் செயலாளர் நாயகம் அங்கெலா கனே அம்மையாரை அடுத்த ஞாயிற்றுக்கிழமை கொழும்புக்கு அனுப்பி வைக்கின்றார் ஐ.நா. செயலாளர் நாயகம்.

இலங்கை நிலைமை மோசமடைந்து வருகின்றமை குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நேரடியாகத் தொலைபேசிமூலம் உரையாடிய பின்னரே தமது விசேட பிரதிநிதியை இலங்கைக்கு அனுப்பும் தீர்மானத்துக்கு ஐ.நா. செயலாளர் நாயகம் வந்திருக்கின்றார்.

இதேசமயம், ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி இலங்கை வருவதற்கு மூன்று நாட்கள் முன்பதாக - எதிர்வரும்21 ஆம் திகதி வியாழக்கிழமை - நியூயோர்க்கில் கூடும் ஐ.நா. பாதுகாப்புச்சபையின் செயலணிக் குழுவில் இலங்கை விவகாரம் ஆராயப்படவிருக்கின்றது.

சிறார்களைப் படைக்குச் சேர்த்தல் உட்பட இலங்கையின் ஆயுத மோதல்களில் சிறுவர்களின் நிலை தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி ராதிகா குமாரசுவாமியும், அவரின் விசேட தூதுவர் அலன் றொக்கும் சமர்ப்பித்த அறிக்கைகள் நியூயோர்க் கூட்டத்தொடரில் விரிவாக ஆராயப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சிறுவர்களைப் படைக்குச் சேர்க்கும் கருணா குழுவின் நடவடிக்கைகளுக்கு அரசுப் படைகள் ஒத்துழைப்பும் ஊக்கமும் அளித்து வருகின்றன என்று அலன் றொக் தமது அறிக்கையில் வெளிப்படுத்தியிருந்தார்.

இப்போது பிரிட்டனில் சிறையில் இருக்கும் கருணா, முழு உண்மைகளையும் பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் உளறிக் கொட்டிவிட்டார் என்று கருதப்படுகின்றது.

இந்த நிலையில் பிரிட்டனையும் ஓர் அங்கத்தவராகக் கொண்டுள்ள ஐ.நா. பாதுகாப்புச் சபையின் செயலணிக் குழுவில் இலங்கை விவகாரம் - அதுவும் சிறுவர்களைப் படைக்குச் சேர்க்கும் விடயம் - எடுக்கப்படும்போது, எந்தப் பாம்பு, எந்தப் புற்றுக்குள்ளிருந்து, எப்படிக் கிளம்பும் என்று தெரியாத நிலைமை காணப்படுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

இதனால் இந்தக் கூட்டத் தொடரில் இலங்கையின் நலனைக் கவனித்து வாதாடுவதற்காக சட்டமா அதிபர், பிரதி சொலிசிட்டர் ஜெனரல், நீதி அமைச்சின் செயலாளர், ஐ.நாவுக்கான இலங்கையின் தூதுவர் என்று உயர்மட்டக் குழுவே நேரில் சென்று களத்தில் இறங்குகின்றது.

இதேசமயம், எதிர்வரும் மூன்றாம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட்டத்திலும் இலங்கையில் மோசமாகியிருக்கும் மனித உரிமைகள் விவகாரம் எடுக்கப்படவிருக்கின்றது. அங்கும் நிலைமையைச் சமாளித்து, சர்வதேசத்தையும் 'தாஜா' செய்து, அவற்றின் எரிச்சலையும், சீற்றத்தையும் அமுக்கி, அடக்குவதற்காக உயர்மட்டக் குழு ஒன்று கொழும்பிலிருந்து ஜெனிவா செல்லவுள்ளது.

இதற்கிடையில், டென்மார்க், சுவீடன், நெதர்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் மனித உரிமைகள் தூதுவர்கள் மூவர் இலங்கைக்கு வர எடுத்துள்ள முயற்சிக்குக் கொழும்பு இடமளிக்காமல் முட்டுக்கட்டை போட்டிருப்பதாகவும் அறியவருகிறது.

அதேநேரம் -

ஐரோப்பிய ஒன்றியத்தின் வேறு உயர்மட்ட அவதானிப்புக் குழு ஒன்று அடுத்தமாதம் கொழும்பு வருகின்றது. இக்குழுவில் பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர் பேர்னாட் குச்னர், ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார ஆணையாளர் பெனீற்றா பெரேரோ வால்ட்னர் ஆகியோர் இடம்பெறுவர் என்றும் கூறப்படுகின்றது.

இவர்கள் இருவருமே மனித உரிமைகள் நிலைநிறுத்தப்பட்டுப் பேணப்படவேண்டும் என்பதில் கடும் போக்குத் தீவிரப்பற்றுள்ளவர்கள் என்பது குறிப்பிட்டுக் கூறக்கூடியது.

இவர்களில் குச்னர் இலங்கை விவகாரம் குறித்து நன்கு அறிந்தவர். பரிச்சயமானவர். முக்கிய மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு நியமிக்கப்பட்ட சர்வதேசப் பிரமுகர்கள் குழுவில் இடம்பெற்றிருந்தவர். அது மட்டுமல்ல. 'எல்லைகளற்ற பிரெஞ்சு மருத்துவர் அமைப்பு' என்ற மருத்துவத் தொண்டர் அமைப்பின் ஸ்தாபகர். தற்போது வடக்கு, கிழக்கில் மருத்துவத் தொண்டுப் பணியில் செயற்படும் இந்த அமைப்பின் ஊடாக இலங்கை விடயங்களை அத்துப்படியாக அறிந்து கொண்டவர் குச்னர்.

எனவே, இந்தக் குழுவின் இலங்கை வருகை, இலங்கை நிலைவரத்தை அப்பட்டமாகத் தெளிவுபடுத்தி, உலகுக்கு அம்பலப்படுத்த உதவும் என எதிர்பார்க்கலாம்.

மொத்தத்தில், இலங்கையில் மூடிமறைத்து, புதைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களையும், தொடரும் அத்தகைய அவலங்களையும் சர்வதேசமும் அறியத்தக்க வகையில் அவை அம்பலமாகும் காலமும், நேரமும் கனிந்து வருகின்றன என்றே தோன்றுகிறது.

# திருமலையில் அனல் மின்நிலையம் அமைக்கும் விவகாரம் இழுபறியில்!

கொழும்பு, பெப்.18

திருகோணமலையில் இந்திய உதவியுடன் அனல் மின்நிலையம் அமைக்கும் விவகாரம் இன்னமும் இழுபறி நிலையில் உள்ளதாக தகவல்கள வெளியாகியுள்ளன.

திருகோணமலையில் அனல் மின் நிலையம் அமைப்பது தொடர்பான ஒப்பந்தம் இலங்கை மின்சாரசபைக்கும் இந்திய தேசிய அனல்மின் உற்பத்திக் கூட்டுத்தாபனத்துக்கும் இடையில் 2006ஆம் ஆண்டிலேயே கைச்சாத்தாகிவிட்டது.

ஒப்பந்தம் கைச்சாத்தானது தொடக்கம் மின்நிலையத்தை அமைப்பதற்கான இடத்தைத் தெரிவதில் இழுபறி நிலை தொடர்கின்றது.

மின்நிலையத்தை சம்பூரில் அமைக்குமாறு இலங்கைத்தரப்பு இந்தியத் தரப்பிடம் கோரியிருந்தது. அதற்கு இந்தியத் தரப்பு மறுப்புத் தெரிவித்தது. அதனால், திருகோணமலை நகரில் இருந்து ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் கப்பல்துறை என்ற இடத்தில் இந்த மின் நிலையத்தை அமைக்க இணக்கம் ஏற்பட்டுக் கடந்தவாரம் அடிக்கல் நடுவதற்கு ஏற்பாடாகியிருந்து.

ஆயினும் -

இவ்வாரம் முற்பகுதியில் கொழும்பு வந்திருந்த இந்திய பிரதி வர்த்தக அமைச்சர் ஜெயராம் ரமேஷ் தலைமையிலான குழுவுடன் நடந்த பேச்சுக்களை அடுத்து மின் நிலையத்தை நிலாவெளியில் உள்ள வேலூரில் அமைக்க இணக்கம் காணப்பட்டது. உத்தேச மின் நிலையத்தை அமைக்க நூறு ஏக்கர் நிலமும் அடையாளம் காணப்பட்டது.

### நிலக்கரி எடுத்துச் செல்வதில் சிரமம்

இந்த மின் நிலையத்துக்குத் தேவையான நிலக்கரியை சம்பூர் இறங்குதுறையில் இறக்கி நிலாவெளி மின்சநிலையத்துக்கு எடுத்துச் செல்லவேண்டும் என இலங்கைத் தரப்பு இந்தியத் தரப்புக்கு நிபந்தனை விதித்துள்ளது.

இந்தோனேஷியாவில் இருந்து கப்பல் மூலம் நிலக்கரியை எடுத்த வர வேண்டும். அக்கப்பல்கள் அங்கு தரித்து நின்று இறக்கும் பணிகளை மேற்கொள்ள சம்பூர் இறங்கு துறையில் பாதுகாப்பு இல்லை. திருகோண மலை துறைமுகத்தை பயன்படுத்த அனுமதித்தால் மட்டுமே மின்நிலையத்தை அமைக்க வசதியாக இருக்கும் என்று இந்தியத் தரப்பில் எடுத்துக் கூறப்பட்டதாம்.

மின் நிலையம் அமையவுள்ள இடத்துக்கு வெகுதொலைவில் உள்ள சம்பூர்ப் பகுதியில் நிலக்கரியை கப்பலில் இருந்து இறக்கி அங்கிருந்து திருகோண மலை துறைமுகத்தை தரைவழியாகச் சுற்றிச் சென்று பலமைல் தூரம்கடந்து, நிலா வெளிவரை எடுத்துச் செல்வது சாத்தியமற்றது என்பதை இந்தியத் தரப்பு சுட்டிக் காட்டியுள்ளதாகவும் தெரியவந்தது.

### கால அட்டவணை

கடந்தவாரம் கொழும்பு வந்திருந்த இந்திய அதிகாரிகளும் இலங்கை அதிகாரிகளும் பேச்சுக்கள் நடத்தி அனல்மின் நிலையத்தை அமைப்பதற்கான கால அட்டவணை குறித்து இணக்கப்பாட்டில் கைச்சாத்திட்டுள்ளனர் எனக் கூறப்பட்டது.

அந்த இணக்கப்பாட்டின் பிரகாரம் 250 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்திசெய்யும் அனல் மின்நிலையம் 2012 ஏப்ரல் மாதத்துக்கு முன்னர் நிர்மாணிக்கப்படும் வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை -

இலங்கை, இந்திய மின்விநியோக வலையமைப்புக்களை கடலின் ஊடாக இணைப்பதன் மூலம் இந்தியாவிலிருந்து நேரடியாக இலங்கைக்கு மின்சாரத்தை விநியோகிக்கும் திட்டத்தை செயற்படுத்துவது குறித்தும் இந்திய, இலங்கைத்தரப்புகள் இணங்கியுள்ளதாக மற்றொரு தகவல் தெரிவித்தது. (அ-1)

# ஆசிரிய உதவியாளர் தெரிவு மார்ச் 15ஆம் திகதியுடன் முடிவு

கொழும்பு, பெப்.18

தொண்டர் ஆசிரியர்களை ஆசிரிய உதவியாளர்களாக உள்வாங்கும் திட்டம் மார்ச் மாதம் 15ஆம் திகதியு டன் முற்றுப் பெறவிருப்பதாக கல்வி அமைச்சு வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது. ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் அதிகாரம் மாகாண கல்வி அதிகார சபையிடம்கையளிக்கப்படவிருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உதவி ஆசிரியர் பதவிகளுக்கு 4,700 பேரைத் தெரிவு செய்வதற்கு கல்வி அமைச்சு முடிவு செய்திருந்தது. வடமத்தி, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களுக்கு உதவி ஆசிரியர்களைத் தெரிவுசெய்யும் பணிகள் முடிவுற்றுள்ளன. தெற்கு, வயம்பா மற்றும் மத்திய மாகாணங்களுக்கான தெரிவுகள் செய்யப்பட வேண்டியுள்ளன.

இவ்வாறு தெரிவுசெய்யப்படும் ஆசிரிய உதவியாளர்கள் ஐந்து ஆண்டுகளுக்கு பயிற்சியொன்றை மேற்கொள்ள வேண்டியிருக்கும். இதில் ஆசிரிய பயிலுநர் அல்லது பொருத்தமான பட்டத்துக்கான ஒரு பாடநெறியை மேற்கொள்ள பணிக்கப்படுவார்கள். ஆசிரிய உதவியாளர்களைத் தெரிவு செய்யும் செயற்பாட்டை நிறுத்திவிடுவதற்கு அரசு எடுத்துள்ள முடிவை எதிர்த்து தொண்டர் ஆசிரியர் குழுவொன்று அண்மையில் வயம்பா மாகாணத்தில் கல்வி அமைச்சுக்கு முன்பாகப் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.(ப)

# இலங்கை எதிர்கொண்டுள்ள பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட சர்வதேச சமூகம் ஆதரவளிக்க வேண்டும்

## அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா தெரிவிப்பு

கொழும்பு, பெப்.18

கடந்த 30 வருடங்களாக இலங்கை எதிர்கொண்டுள்ள பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட சர்வதேச சமூகம் ஆதரவளிக்க வேண்டும்-

இலங்கை, சுமார் 30 வருட காலமாக பயங்கரவாதத்தின் சவால்களை எதிர்கொண்டு வருகிறது. பயங்கரவாத சவால்களை சர்வதேச சமூகத்தின் கவனத்துக்கு கொண்டுவரும் தேவையும் காலமும் இப்போது உண்டாகி உள்ளது.

இப்படித் தெரிவித்துள்ளார் அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கிளை அலுவலகம் ஒன்று ஜேர்மனியின் பிராங்பேட் நகரில் நேற்று சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. இது தொடர்பான சம்பிரதாய பூர்வ நிகழ்வு பிராங்பேட் ரமடா ஹோட்டலில் நடைபெற்றது. அங்கு உரையாற்றும்போதே ஸ்ரீபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பயங்கரவாதச் செயற்பாடுகள் குறித்து உலகெங்கும் உள்ள மக்களுக்கு உரிய முறையில் அறிவுறுத்தப்பட வேண்டும். உலக நாடுகளில் உள்ள பல்வேறு அரசியல் தலைமைகள் இது குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கை இராணுவத்தினரின் சிறந்த முன்னகர்வுகள் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் பல பின்னடைவுகளை சந்தித்துள்ளனர். புலிகள் இயக்கத்தில் பெரும் இழப்புக்களும் ஏற்பட்டுள்ளன. வெகு விரைவில் நாட்டிலிருந்து பயங்கவாதத்தை முற்றாக ஒழிப்பதற்கான ஆளுமையும் திறமையும் இலங்கை இராணுவத்திடம் உள்ளது.

பயங்கவாத ஒழிப்பு நடவடிக்கையில் இலங்கை மக்களுக்கு பாரிய பொறுப்பு இருக்கிறது. பயங்கவாத ஒழிப்பு தொடர்பான நடவடிக்கைகளில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும்.

சர்வதேச ரீதியில் புலிகள் மேற்கொண்டுவரும் பொய்ப் பிரசாரங்களை முறியடிக்கக் கூடிய தன்மையை வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் உருவாக்க வேண்டும்- இப்படி அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா கூறினார். (203-2)

# ஊடுருவல் தாக்குதல் முயற்சி முறியடிப்பு என அறிவிப்பு

வவுனியா, பெப்.18

கொக்குத்தொடுவாய் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 8.50 மணியளவில் கிளைமோர் தாக்குதலை நடத்தும் நோக்குடன் ஊடுருவிய இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் ஆழ ஊடுருவும் படையினர் பலத்த இழப்புகளுடன் பின்வாங்கினர் என்றும் -

அவர்கள் கொண்டுவந்த பெருமளவு கிளைமோர்கள் மற்றும் வெடிகள் என்பன தங்களால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் - விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (அ-2)

## நாளை

| | |
|---|---|
| மாசி - 06 | 19.02.2008 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி : திரயோதசி | |
| | முற்பகல் 11.14 |
| நட்சத்திரம் : | பூசம் |
| | முன்னிரவு 07.31 |
| சுபநேரம் : | 11.02 - 12.32 |
| ராகுகாலம் : | 03.32 - 05.02 |

# சமூகசேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கு பல்வேறு பொருள்கள்

## முதற்கட்டமாக இன்று வழங்கப்படுகின்றன

யாழ்ப்பாணம், பெப்.18

யாழ்.மாவட்ட சமூகசேவைகள் திணைக்கத்தின் பராமரிப்பில் உள்ள நிறுவனங்கள் தமது வேலைத் திட்டங்களை வினைத்திறமையாக செயற்படுத்தும் முகமாக பல பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

அரச முதியோர் இல்லம், தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுவர் இல்லங்கள், சான்றுபெற்ற பாடசாலை, அரச சிறுவர் இல்லம், சமூகநலத்துறை மாவட்ட அலுவலகம், சிறுவர் நன்னடத்தை மாவட்ட அலுவலகம் ஆகியவற்றுக்கு இந்தப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக இன்று இளவாலை, சில்லாலை ஆகிய இடங்களிலுள்ள றோமன் கத்தோலிக்க மகளிர் இல்லங்கள், ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் ஆண்கள் இல்லம் ஆகியவற்றுக்கு கணனி இயந்திரங்கள் யாழ். பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் வைத்து ஆணையாளர் திருமதி பீ.சிவலிங்கத்தினால் வழங்கப்படவுள்ளன.

மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளரினால் கடந்த 2006 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட பின்வரும் பொருள்கள் அண்மையில் இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினால் கப்பலில் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.


கணனி இயந்திரங்கள் (16), நிழற்படப்பிரதி இயந்திரம் (2), சலவை இயந்திரம் (2), தொலைநகல் (பக்ஸ்) இயந்திரம் (2), தொலைக்காட்சிப் பெட்டி (2), மாருதி வாகனம் (1), ஒலிப் பதிவுக் கருவி (1), லெமனேற்றிங் இயந்திரம் (14), மின் விசிறி (8), குளிர்சாதனப்பெட்டி (1), அறிவியல்நூல்கள், காகிதாதிகள், பாடசாலை உபகரணங்கள் ஆகிய பொருள்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு ஓடி வந்தது

பிறப்பு 28 . 04 . 1963

இறப்பு 01 . 03 . 2007



## மாணிக்கம் மனோகரன் (மனோ)

### (மனோ களஞ்சியம் அன் கேபிள் விஷன்)

திதி: 18.02.2008

### இன்முகம் மறைந்தது! எம் அகம் தளர்ந்தது!!

உன் புன் சிரிப்பால் உலகையே
உன் வசமாக்கி வாழ்ந்த உத்தமன் நீ,
உனது வஞ்சமற்ற சிந்தனை, செயல்
உனக்கு ஊன்று கோலாகி நின்று
உனது இலட்சியப் பாதையில் வெற்றிபெற
உச்சத்தில் கொண்டு சென்றது
எல்லோருக்கும் நடுவே நீ ராஜாவாக நின்றாய்
பலருக்குக் கை கொடுத்த தெய்வமாகத் திகழ்ந்தாய்

கோடையில் கர்ணனாகிய உன் கதை முடிந்ததுவே
ஒருவனுக்கு மரணத்தில்தான்
நல்லவன் என்று பெயர் சூட்டப்படும்
நீயோ நல்லவர் உள்ளத்தில்
தெய்வமாகி நிலைத்து விட்டாய்
உன் உயிர் மட்டும் இங்கு இல்லை
உன் ஒளி இவ்வுலகில் என்றும் பிரகாசிக்கும்.

43/2, வேலப்பர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

இறைவனை வேண்டி நிற்கும்:
**குடும்பத்தினர்,**
**அன்பர்கள்.**

(71181)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைக்கல் கிளார்க் பொறுப்பான ஆட்டம் இந்தியாவை வீழ்த்தியது ஆஸ்திரேலியா


மைக்கல் கிளார்க்

அடிலெய்ட், பெப்.18

மைக்கல் கிளார்க் பொறுப்பாக ஆடி தனது அணியைக் காப்பாற்ற இந்தியாவுக்கு எதிரான முத்தரப்புத் தொடரின் 7ஆவது போட்டியில் ஆஸ்திரேலியா 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியைப் பதிவுசெய்தது. ஒரு முனையில் ஆஸியின் விக்கெட்டுகள் சரிந்துகொண்டிருக்க மறுமுனையில் நம்பிக்கை கொடுத்த மைக்கல் கிளார்க் 79 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து அணியை கௌரவமான நிலைக்குக் கொண்டு சென்றிருந்தார்.

ஆஸ்திரேலியா, இந்தியா, இலங்கை ஆகிய அணிகள் பங்கேற்கும் கொமன்வெல்த் பாங்க் முத்தரப்புத் தொடர் ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவருகின்றது. தொடரின் 7ஆவது போட்டியில் இந்தியா, ஆஸ்திரேலியா அணிகள் நேற்று அடிலெய்ட்டில் பலப்பரீட்சையில் ஈடுபட்டன.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்ந்தெடுத்தது. தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய கில்கிறிஸ்ற் 15 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில், இஷாந்த் சர்மாவின் பந்துவீச்சில் 'போல்ட்' முறையில் விக்கெட்டைப் பறிகொடுத்து பவிலியன் திரும்பினார். அவரைத் தொடர்ந்து களமிறங்கிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் இம்முறையும் சோபிக்கத் தவறி 10 ஓட்டங்களுடன் முனாப் பட்டேலின் பந்துவீச்சில் ரோகித் சர்மாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் நிதானமாக ஆடிய தொடக்க ஆட்டக்காரரான ஹைடன் 34 பந்துகளில் 13 ஓட்டங்கள் எடுத்திருந்த போது, இர்பான் பதானின் பந்துவீச்சில் டோனியிடம் பிடிகொடுத்து வெளியேறினார். ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் சைமண்ஸ் 3 ஓட்டங்கள் எடுத்த நிலையில், இஷாந்த் சர்மா பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

மைக்கேல் ஹசே 5 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது, பதானின் பந்துவீச்சில் டோனியிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து 18 ஓட்டங்கள் எடுத்திருந்த ஹோப்ஸ், ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சில் 'ஸ்ரம்ப்' செய்யப்பட்டார். இந்திய அணியின் பந்துவீச்சைத் தாக்குப்பிடிக்க முடியாமல் ஆஸி. அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தவித்தது. ஒரு கட்டத்தில் ஆஸ்திரேலியா 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 112 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்தது.

இந்திய வீரர்களின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் ஓட்டம் குவிப்பதற்கு ஆஸி. அணி திணறிய நிலையில், மைக்கல் கிளார்க்கும், பிரட் ஹொக்கும் ஜோடி சேர்ந்து நிதானமாக ஆடி ஆஸ்திரேலியாவை ஓரளவு சரிவிலிருந்து மீட்க உதவினர். இருவரும் கூட்டாக 7ஆவது விக்கெட்டுக்காக 72 ஓட்டங்கள் சேர்த்திருந்த நிலையில், ஹொக் 32 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்' ஆனார்.

சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த மைக்கல் கிளார்க் 79 ஓட்டங்கள் பெற்றிருந்தபோது பதான் வீசிய பந்தில் இஷாந்த் சர்மாவிடம் பிடிகொடுத்து பவிலியின் திரும்பினார். ஒருநாள் போட்டிகளில் அவருக்கு இது 29 ஆவது அரைச்சதமாகும். 108 பந்துகளை எதிர்கொண்ட அவர் 6 பவுண்டரிகளையும் தனது ஓட்டஎண்ணிக்கையில் சேர்த்திருந்தார்.

அவரைத் தொடர்ந்து களமிறங்கிய பிரக்கன் ஓட்டம் எதுவும் எடுக்காமல் பதான் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் ஆஸ்திரேலியா 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 203 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்தியா சார்பில் பதான் அபாரமாகப் பந்துவீசி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இஷாந்த் சர்மா 2 விக்கெட்டுகளையும், முனாப் பட்டேல் மற்றும் ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

204 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி பெறலாம் என ஆடத் தொடங்கிய இந்தியா 41.2 ஓவர்களில் 153 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்து 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. அணி சார்பாக ஓரளவு போராடிய மகேந்திர சிங் டோனி 37 ஓட்டங்களையும், கௌதம் கம்பீர் 34 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தனர்.

யுவராஜ் சிங் 26 ஓட்டங்களுடனும், றொபின் உத்தப்பா 18 ஓட்டங்களுடனும், சச்சின் டெண்டுல்கர் 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்திருந்தனர். மற்றைய வீரர்கள் எவரும் இரட்டை இலக்க ஓட்டஎண்ணிக்கையைத் தொடவில்லை.

ஆஸ்திரேலிய அணியின் பந்துவீச்சில் மிற்செல் ஜோன்ஸன் 3 விக்கெட்டுகளையும், பிரக்கன், ஜேம்ஸ் ஹோப்ஸ், பிரட் ஹொக் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக மைக்கல் கிளார்க் தெரிவானார்.

நேற்றைய போட்டியின் முடிவில் ஆஸ்திரேலியா 17 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், இந்தியா 8 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும், இலங்கை 6 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்திலும் உள்ளன.

விளையாட்டு அரங்குகளில்

# இன்னும் 8 மாதங்களில் ஓய்வு

## கங்குலி பேட்டி



புதுடில்லி, பெப்.18

இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்ட விரக்தியில் இருக்கிறார் சௌரவ் கங்குலி. இன்னும்8 மாதங்களில் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற அவர் முடிவு செய்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் நடந்துவரும் முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து கங்குலி நீக்கப்பட்டார். இதனால் பெரிதும் ஏமாற்ற மடைந்திருந்த அவர், ஓய்வு பெறுவது குறித்து கருத்து எதுவும் கூறாமல் மௌனம் காத்து வந்தார். ஆனால், தற்போது ஓய்வு பெறுவது குறித்த தன்னுடைய கருத்துகளை வெளியிட்டுள்ளார். அவர் கூறியவை வருமாறு:-

''முத்தரப்பு போட்டிகளில் நான் நீக்கப்பட்டமை அதிர்ச்சியாக இருந்தது. போதிய திறன் இல்லாததால்தான் என்னை நீக்கினார்கள் என்று தோன்றவில்லை. ஆசிய நாடுகள் நடத்த உள்ள அடுத்த (2011) உலக கிண்ணப் போட்டிகளில் நான் விளையாட மாட்டேன். இன்னும் 7 அல்லது 8 மாதங்களில் ஓய்வு பெற்று விடுவேன். இந்த ஆண்டு ஒருநாள் போட்டிகள் அதிகம் இல்லை. இலங்கையுடனான தொடர், செப்டெம்பரில் நடக்க உள்ள சம்பியன் கிண்ணத் தொடர் ஆகியவை தவிர மீதமுள்ள போட்டிகள் அனைத்தும் டெஸ்ட் போட்டிகள் தான்.

''எனவே செப்டெம்பர் வரை நான் விளையாடுவேன். பின்னர் ஓய்வு பெறலாம் என நினைக்கிறேன். கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளில் தலைமைப் பதவி பறிபோனது, அணியிலிருந்து நீக்கப்பட்டது போன்ற பல விடயங்களில் என்னைப் பற்றி பலவாறாக எழுதினார்கள். அவை எனக்கு மிகவும் எரிச்சலூட்டின. இது உலகில் வேறு எங்கும் நடக்காத ஒன்று. எந்த வீரருக்கும் நடக்க கூடாத ஒன்று. என்னை ஒரு கிரிக்கெட் வீரராக மட்டும் பார்க்க வேண்டும் என விரும்புகிறேன்.'' - இவ்வாறு கங்குலி கூறினார்.

# பாகிஸ்தானில் இன்று நாடாளுமன்றத் தேர்தல்



இஸ்லாமாபாத், பெப்.18

தேர்தல் மோசடிகள், பாரிய வன்முறைகள் குறித்த அச்சத்தின் மத்தியில் பாகிஸ்தானில் இன்று நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறுகின்றது.

பாகிஸ்தானின் இன்றைய தேர்தல் நாட்டில் புதிய மக்களாட்சியை உருவாக்கும் என்று அந்நாட்டு மக்கள் நம்பும் அதேவேளை உலக நாடுகள் பலவும் நம்புகின்றன. இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கு எதிரான கடும் நடவடிக்கைகளுக்கான சூழ்நிலையை உருவாக்கும் என்ற எதிர்பார்ப்பும் காணப்படுகின்றது.

இதேவேளை, தேர்தல் முடிவுகள் காரணமாக நாட்டில் மேலும் நிச்சயமற்ற நிலை உருவாகலாம் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. அரசிற்கு சார்பாக பாரிய தேர்தல் மோசடிகள் இடம்பெறும் பட்சத்தில் அதனால் நாட்டில் பாரிய வன்முறைகள் உருவாகலாம்.

பாகிஸ்தான் மக்கள் கட்சி வெற்றி பெறும் பட்சத்தில் அந்தக் கட்சியுடனான ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பின் மோதல்போக்கு தீவிரமடையும் என அரசியல் விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

தேர்தலிற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்புகள் பாகிஸ்தான் மக்கள் கட்சி வெற்றி பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக உள்ளமையை வெளிப்படுத்தியுள்ளன. முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் கட்சி இரண்டாவது இடத்தில் உள்ளது. ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் சார்பு பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சிக்கு மக்கள் மத்தியில் குறைந்தளவு ஆதரவேயுள்ளதைக் கருத்துக் கணிப்புகள் புலப்படுத்தியுள்ளன.

தேர்தல் பாதுகாப்புப் பணிகளில் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட பொலிஸாரும், எண்பதாயிரம் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனா. வாக்குச்சாவடிகளில் வன்முறையில் ஈடுபடுவோரை கண்டதும் அவர்களைச் சுடுவதற்கு இராணுவத்தினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# இலங்கை இராணுவ உளவுப் பிரிவு அதிகாரிகளுக்கு இந்தியாவில் பயிற்சி

புனே, பெப்.18

இலங்கை இராணுவ உளவுப் பிரிவைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள் குழு, புனேயில் இரகசியமாகப் பயிற்சிகளைப் பெற்று நாடு திரும்பியுள்ளது.

இந்திய இராணுவத்தின் புலனாய்வுப் பயிற்சிமையம் புனேயில் மட்டுமே உள்ளது. புலனாய்வுத்துறையில் நவீன இலத்திரனியல் போர்த்திட்டம், கட்டளை, கட்டுப்பாடு, கணினிப்புலனாய்வு போன்ற அனைத்துப் பயிற்சிகளும் இந்த ஒரே மையத்தில் அளிக்கப்படுகின்றன.

இலங்கையிலும் இராணுவப் புலனாய்வுப் பயிற்சிமையம் நவீனப்படுத்தப்பட உள்ளது. இந்திய இராணுவப் புலனாய்வுப் பயிற்சிபெற, 'ஜெனரல்சேர் கொதலாவல இராணுவ பல்கலைக்கழகத்தின் கட்டளை அதிகாரி மற்றும் துணைவேந்தர், மேஜர் ஜெனரல் பாலசூரியா, பயிற்சிப் பிரிவின் தலைமை அதிகாரி திலகரத்ன, பயிற்சிக்கழக இயக்குனர் அமரதாஸ ஆகியோர் கொண்ட குழு புனேயில் பயிற்சி பெற்றுத் திரும்பி உள்ளது.

புனேயில் உள்ள தேசிய இராணுவ 'அக்கடமி'யின் புலனாய்வு பயிற்சி மையத்தில் இவர்களுக்கு, இந்திய இராணுவப் புலனாய்வுத் துறையின் உயர் அதிகாரிகள் பல்வேறு பயிற்சிகளை அளித்தனர். (சி)

# ஆப்கானிஸ்தானில் நேற்றுப் பயங்கரம்; தற்கொலைத் தாக்குதலில் 80 பேர் பலி!

கந்தஹரார், பெப்.18

தென் ஆப்கானிஸ்தானிலுள்ள கந்தஹாரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல் ஒன்றில் குறைந்தபட்சம் 80 பேர் வரை கொல்லப்பட்டனர்; 90 பேர் வரை காயமடைந்திருக்கின்றனர்.

நாய்ச் சண்டைப் போட்டியை ரசித்துக்கொண்டிருந்த கூட்டத்தினர் மத்தியில் இத் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. திறந்த வெளி அரங்கொன்றில் முந்நூறுக்கும் மேற்பட்டோர் இந்தப் போட்டியை பார்வையிட்டுக்கொண்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2001ஆம் ஆண்டு தலிபான்கள் ஆட்சியிலிருந்து அமெரிக்கக் கூட்டுப்படைகளால் அகற்றப்பட்ட பின்னர், அங்கு இடம்பெற்ற அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்திய மோசமான தற்கொலைத் தாக்குதலாக இது வர்ணிக்கப்படுகின்றது.

''இக்குண்டு வெடிப்பில் பெருந்தொகையானோர் கொல்லப்பட்டனர். டசின் கணக்கானோர் காயமடைந்துள்ளனர். பலியானோரின் எண்ணிக்கை இதுவரை அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்படவில்லை.'' - என ஆப்கானின் உள்துறை அமைச்சின் பேச்சாளர் ஷிமிரிபஷாரி தெரிவித்துள்ளார்.

தற்கொலைக் குண்டுதாரியொருவரால் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்பதை பொலிஸார் நேற்றுமாலை உறுதிப்படுத்தினர். பொலிஸார் காயமுற்றோரையும் சடலங்களையும் அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர் என்றும் மேற்படி பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பயரங்கரக் குண்டுவெடிப்பில் ஐந்து பொலிஸ் வாகனங்களும் நிர்மூலமாக்கப்பட்டு விட்டன என ஏ.பி. செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாய்ச்சண்டைப் போட்டிகளின்போது, போட்டிப் பந்தயங்களிலும் ஆர்வலர்கள் ஈடுபடுவார்கள். தலிபான்கள் தமது ஆட்சிக் காலத்தில் நாய்ச் சண்டைப் போட்டிகளுக்குத் தடைவிதித்திருந்தார்கள் என்றும் அவர் விவரித்துள்ளார்.

உலக அரங்கில்

# செவ்வாய்க் கிரகத்தில் மனிதன் வசிக்க முடியாது

## நாஸா விஞ்ஞானி கருத்து

நியூயோர்க், பெப். 18

சூரியக் குடும்பத்திலுள்ள சிவப்புக் கிரகமான செவ்வாய்க் கிரகத்தில் பூமியைப் போலவே நீர், மலைகள் போன்றவை உள்ளன. எனவே, அங்கு மனிதர்கள் வசிக்க முடியும் என்று கருதப்பட்டது. ஆனால், செவ்வாயில் மனிதர்கள் மட்டுமல்ல சிறிய நுண்ணுயிர்கள் கூட வசிக்க முடியாது என்று நாஸா விஞ்ஞானி ஒருவர் தெரிவித்துள்ளார்.

செவ்வாயில் ஆய்வு மேற்கொண்டு வரும் 'ரோவர்' விண்கலம் அனுப்பிய தகவல்களை வைத்துப் பார்க்கும்போது இந்த முடிவுக்கு வந்ததாரெனவும் அந்த விஞ்ஞானி கூறியுள்ளார்.

செவ்வாய்க் கிரகத்தில் உள்ள நீரில் அமிலத்தன்மை மற்றும் உப்புத்தன்மை அதிகமாக உள்ளது. நீரில் அதிகப்படியான தாது உப்புகள் உள்ளன. பாறைகளும் கூட பாதகமான அம்சங்களைக் கொண்டதாகவே இருக்கின்றன.

'ரோவர்' விண்கல விஞ்ஞானி ஆண்ட்ரூ கூறுகையில், ''செவ்வாய்க்கிரகத்தில் மனிதர்கள் வசிப்பதற்கு ஊசி முனை அளவுக்குக்கூட வாய்ப்பில்லை'' - என்றார். இதற்கிடையே செவ்வாய்க் கிரகத்துக்கு 'போனிக்ஸ்' என்ற விண்கலத்தை நாஸா அனுப்பியுள்ளது. இந்த விண்கலம் மே மாதம் 25ஆம் திகதியன்று செவ்வாய்க் கிரகத்தைச் சென்றடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச மன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகம் ஜரீன்கான் விடுத்துள்ள கோரிக்கை தொடர்பாகக் கேட்ட போதே அவர் மேற்கண்டாவறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது:-

சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கைக்குள் வருவதற்கு நாட்டில் பாரதூரமான சம்வங்கள் எதுவுமே இடம்பெறவில்லை. மோதல்கள் இடம்பெறுகின்ற இதர நாடுகளுடன் ஒப்பிடுகின்றபோது இலங்கை அரசாங்கத்தினால் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. மனித உரிமைகளுக்கு அரசாங்கம் மதிப்பளிக்கின்றது.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதாக பொய்யான அறிக்கையைவிட்டு மன்னிப்புச் சபையை நாட்டிற்குள் கொண்டு வருவதற்கு பல்வேறு கோணங்களிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த முயற்சிகளுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் அடி பணியாது - என்றார் அவர். (அ)

## சுதந்திரப் பிரகட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, கொசோவோவின் சுதந்திரப் பிரகடனத்தை அடியோடு நிராகரித்திருக்கும் சேர்பியப் பிரதமர் போரிஸ் டொடிக், சுதந்திர அறிவிப்பை ''சட்டவிரோதனமானது; ஒருதலைப் பட்சமானது'' என வர்ணித்திருக்கின்றார்.

ரஷ்யாவும் மேற்படி சுதந்திர அறிவிப்பை சட்டவிரோதமானது என வர்ணித்திருப்பதோடு உலக நாடுகள் பலவும் துண்டாடப்படுவதற்கு இந்த அறிவிப்புக் காரணமாக அமைந்துவிடும் அபாயமுள்ளது என்று எச்சரித்துள்ளது.

10,887 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட கொசோவோவில் 2 கோடி 10 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். இவர்களில் 88 சதவீதமானவர்கள் அல்பேனிய முஸ்லிம்களாவர். 6 சதவீதமானோர் சேர்பியர்களாவர். அல்பேனியர்களை முதன்மையாக வைத்தே கொசோவோப் பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஐ.நா. செயலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் ஐ.நா.செயலாளர் நாயகம் பான் - கீ - மூன் கடந்த வாரம் மேற்கொண்ட தொலைபேசி உரையாடலைத் தொடர்ந்தே அவரின் பிரதிநிதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கின்றார்.

இந்தத் தொலைபேசி உரையாடலின் போது இலங்கையில் மோசமடையும் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் நிலைவரம் குறித்து கவலை வெளியிட்ட பான் - கீ - மூன், இதனைச் சரி செய்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் தெளிவுபடுத்தினார் என்று கூறப்பட்டது.

மேலும், மோதல் நடைபெறும் பகுதிகளில் உள்ள - உள்நாட்டில் இடம்பெயர்ந்த - மக்களுக்கு மனிதாபிமானப் பணிகளையாற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்புகளை அனுமதிக்குமாறும் பான் - கீ - மூன், ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பான் - கீ - மூன் அரசியல் விவகாரங்களுக்கான தனது உதவி செயலாளர் நாயகம் அங்கெலா கனே அம்மையாரைத் தாம் இலங்கைக்குஅனுப்புகிறார் எனவும், அவர் நாட்டின் நிலைவரத்தை நேரடியாக பார்வையிட்டுத் தமக்கு அறிக்கை சமர்ப்பிப்பார் என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு தெளிவுபடுத்தியுள்ளதுடன் அவரின் விசேட பிரதிநிதியின் விஜயத்திற்கும் இணக்கம் தெரிவித்துள்ளார் எனக் கூறப்பட்டது.

ஜேர்மனியைச் சேர்ந்தவரான அங்கெலா கனே அம்மையார் பெப்ரவரி 24ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இலங்கையில் சிறுவர்களின் நிலைவரம் குறித்து ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் விசேட கூட்டம் நடைபெற்ற சில நாட்களின் பின்னர் அவர் இலங்கை வரவுள்ளார்.

கடந்த வாரம் ஜேர்மனியின் பொருளாதார ஒத்துழைப்பு அமைச்சர், ஐக்கிய நாடுகள் இலங்கைக்கு தனது பிரதிநிதியொருவரை அனுப்ப வேண்டுமென தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஐரோப்பிய ஒன்றியக் குழு அடுத்தமாதம் வருகிறது

அதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தின் இருவர் அடங்கிய குழு மார்ச் மாதம் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாவும் அவர் தெரிவித்திருந்தார்.

இக் குழுவில் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார உறவுகளுக்கான ஆணையாளர் பெனிட்டா வேர்ல்டெனரும் பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் பேர்னாட் குச்னரும் இடம் பெறவுள்ளனர். (உ)

## தனி நாடாகியது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும் மகிழ்ச்சிக் கோஷங்களாலும் அதிர்ந்தது.

கொசோவோவில் பெரும்பான்மையின ராக வாழும் அல்பேனியர்கள் வீதிகள் எங்கும் ஆடியும் பாடியும் சுதந்திர அறிவிப்பைக் கொண்டாடினர்.

நாடாளுமன்றில் சுதந்திரப் பிரகடனம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து நாடாளுமன்றப் பேச்சாளர் ஜக்கப் ஹரஸ்னிகி, ''சேர்பிய மாகாணமான கொசோவோ சுதந்திரமான, ஜனநாயகமான குடியரசு நாடாகப் பிரகடனப் படுத்தப்படுகின்றது'' - என்று அறிவித்தார். அதனைத் தொடர்ந்து மேற்படி தீர்மானத்தில் பிரதமர் ஹசீம் தச்சி, ஜனாதிபதி பற்மிர் சிடீயூ ஆகியோர் கையெழுத்திட்டனர்.

நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் தொடர்ந்து பிரதமர் ஹசீம் தச்சி உரையாற்றுகையில் கூறியவை வருமாறு,

''இந்த நாளுக்காகவே கொசோவோ நீண்ட காலமாகக் காத்திருந்தது. இன்று முன்னோக்கிய நகர்வில் கொசோவோ காலடியெடுத்து வைக்கின்றது. சுதந்திரமும் விடுதலையும் கிடைத்தமையையிட்டு கொசோவோ பெருமையடைகிறது. என்றோ ஒரு நாள் சுதந்திரத் தனிநாடுகளுடன் நாங்களும் ஒரு சுதந்திர நாடாக இணைவோம் என்று கனவு கண்டு வந்தோம். கடைசிவரை நாங்கள் நம்பிக்கை தளரவில்லை. இன்று நாங்கள் அதைச் செய்துமுடித்திருக்கின்றோம்.

''கொசோவோ என்னும் தனிநாடு ஜனநாயகமானதாகவும், பல்வேறு இனங்களுக்கும் சமவாய்ப்பை வழங்கக்கூடியதாகவும் அமையும். கொசோவோ மீண்டும் ஒருபோதும்பெல்கிரேட்டுடன்இணையாது''-என்றார். (சி)

## வடக்கு இடைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரியை நியமிக்கவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விருப்பம் கொண்டிருக்கிறார் எனவும் கூறப்படுகிறது.

இருப்பினும் எவரினதும் 'றப்பர் ஸ்ராம்'மாக தான் இருக்க விரும்பவில்லை என்று ஆளுநர் பொறுப்புத் தொடர்பாக முன்னர் கருத்துத் தெரிவிக்கையில் ஆனந்தசங்கரி மறுப்புத் தெரிவித்திருந்தார். இதேவேளை ஆனந்த சங்கரி ஆளுநராக பதவியேற்க விரும்பவில்லையெனில் அடுத்த தெரிவு டக்ளஸ் தேவானந்தாவாகவே இருக்கும். ஆளுநர் பொறுப்பு அளிக்கப்பட்டால் அமைச்சுப் பொறுப்பிலிருந்து தான் விலகத் தயாராக இருப்பதாக டக்ளஸ் ஏற்கனவே கூறியிருக்கிறார்.

உத்தேச இடைக்கால சபையானது ஆளுநருக்கு ஆலோசனை வழங்கக்கூடிய அமைப்பாகும்.

அதில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீனும் இடைக்கால சபையில் இடம் பெறக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டாலும், இதுவரை மஹிந்த தன்னிடம் இதுபற்றி எதுவும் கேட்கவில்லை என்றார் அவர். (சி)

## சர்வகட்சிக் குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திஸ்ஸ விதாரண கூறினார்.

உரிய நேரத்தில் கூட்டமைப்பினர் அழைக்கப்பட்டு அவர்களிடம் கருத்துகளைப் பெற்றுக் கொள்ளத் தாம் திட்டமிட்டுள்ளார் என்றும் அவர் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இறுதி அறிக்கையைத் தயாரிப்பதற்கான நடவடிக்கை இப்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளது. இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் அந்தத் தீர்வு யோசனையை இறுதிசெய்யத் திட்டமிட்டுள்ளோம்.

அது இறுதிசெய்யப்பட்டதும் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் கலந்துகொள்ளாத - நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் - அரசியல் கட்சிகளிடமும், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தாத கட்சிகளிடமும் அந்த இறுதி யோசனை தொடர்பாகக் கருத்துகளைப் பெற நான் திட்டமிட்டுள்ளேன்.

அந்த வகையில், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் - சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவில் கலந்துகொள்ளாத - ஐ.தே.கட்சி மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகளை அழைத்து அக்கட்சிகளிடமும் கருத்துகளைப் பெறுவேன்.

இதற்குப் புறம்ப, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் அழைதது அவர்களிடமும் கருத்துக்களைப் பெற நான் திட்டமிட்டுள்ளேன்.

அப்படிப் பெறப்படும் கருத்துக்களை அந்த இறுதி யோசனையில் உள்ளடக்குவதா, இல்லையா என்று அச்சமயத்தில் கலந்தாலோசிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும் - என்றார். (சி)

## இந்தியத் தலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழுத்தத்திற்கும் இணங்கவே இலங்கை அரசு அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப் படுத்தும் முடிவைத் திடீரென எடுத்தது என ஜே.வி.பி. கருதுகின்றது.

13ஆவது திருத்தத்தின் கீழ் மாகாணங்களுக்கு பொலிஸ் மற்றும் ஏனைய அதிகாரங்களை வழங்குவது நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையலாம் என ஜே.வி.பி. அச்சம் கொண்டுள்ளது. வடக்கு மற்றும் கிழக்கிற்கு இடைக்கால நிர்வாக சபைகளை வழங்குவதையும் அக்கட்சி எதிர்க்கின்றது.

கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இவ்விடயங்கள் குறித்து முக்கியமாக ஆராயப்பட்டது.

இலங்கையில் தனது பிடியை இறுக்கிக்கொள்ளும் திட்டத்தின் ஒரு பகுதியாகவே 13 ஆவது திருத்தத்திற்கான அழுத்தத்தை இந்தியா கொடுப்பதாக ஜே.வி.பியின் மத்திய குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

திருகோணமலையில் எரிபொருள் சேமிப்புக் குதங்களை ஆக்கிரமித்துள்ள இந்தியா, இப்போது அங்கு அனல் மின்சார உற்பத்தி நிலையம் என்ற பெயரில் காலூன்ற முயற்சிப்பதாகவும் ஜே.வி.பியின் மத்திய குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டதாம்.

இதேவேளை, அக் கூட்டத்தில் மஹிந்த அரசின் செயற்பாடுகளை அம்பலப்படுத்தும் - நாடளாவிய - பிரசாரத்தை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டதாக அறியப்படுகிறது. இதற்கான முதலாவது கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

### யுத்த வெற்றி அரசியல் இலாபம் தேடுவதற்கு

அரசு இந்த யுத்தத்தையும் அதன் பெறுபேறுகளையும் அரசியல் இலாபம் தேடுவதற்காகப் பயன்படுத்துகிறது என ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க பொதுக்குழுக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அரச செலவில் ஆடம்பரக் கொண்டாட்டங்கள் இடம்பெறுகின்ற அதேவேளை, பொது மக்களும் படையினரும் எதிர்கொள்ளும் துயரங்கள் அலட்சியம் செய்யப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக மக்கள் பொருளாதார நெருக்கடிகளைத் தாங்கிக்கொள்கின்ற அதேவேளை, அரசு மக்களினதும் இராணுவத்தினரினதும் துயரங்களை அலட்சியம் செய்து அரசியல் இலாபமீட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக சோமவன்ஸ அங்கு கடுமையாகக் குற்றம் சுமத்தினார்.

அரசுக்கு எதிரான ஜே.வி.பியின் தற்போதைய பிரசார நடவடிக்கைகளை ஏப்ரல் 23 ஆம் திகதி வரை முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் மத்திய குழுக் கூட்டத்தில் இந்தியாவிற்கும் அரசுக்கும் எதிராக இரட்டைப் பிரசாரத்தை ஒரே சமயத்தில் முன்னெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. (உ)

## இலங்கை அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொசோவோவின் ஒரு தலைப்பட்சமான தனிநாட்டுப் பிரகடனம் சர்வதேச உறவுகளில் சமாளிக்க முடியாத முன்னுதாரணமாக அமைந்துவிடும். சுதந்திர நாடுகளின் நிறுவப்பட்ட ஒழுங்கைப் பாதிக்கும். சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்புக்கும் பெரும் அச்சுறுத்தலாகிவிடும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)


இதோ உங்களுக்காக...

FLASH
1) 1GB Kingston USB - 1000/=
2) 2GB Kingston USB - 1750/=
3) 4GB Kingston USB - 2900/=

RAM KINGSTON
1) 512MB DDR II - 1700/=
2) 1GB DDR II - 2800/=
3) 128 SD Ram - 1500/=
4) 256 SDRam - 2500/=

TONERS
1) HP Toner 12 A - 5600/=(Original)
2) HP Toner 49 A - 5800/=(Original)
3) HP Toner 92 A - 5700/=(Original)
4) HP Toner 13 A - 5800/=(Original)
5) HP Toner 15 A - 5700/=(Original)

MOTHER BOARD
1) Biostar - 6400/=
2) Foxcon - 6750/=
3) Gigabyte - 7250/=
4) Intel 945 - 9500/=
5) Asus - P5GC-Max - 7800/=
6) 478 Mother Board - 7500/=

MONITORS
1) View Sonic 15'' Black - 12000/=(CRT)
2) View Sonic 15'' Silve Black - 13000/=(CRT)
3) View Sonic 17'' Widescreen - 25500/=(LCD)

Intex Keyboard - 500/=
Intex Speaker - 500/=
DVD R/W Sata - 4250/=
UPS - 6400/=

BOOFERS
1) Creatives 5.1 - 9500/=
2) Microlab 2.1 - 3800/=

PRINTER
1) HP 1020 Laser Jet - 19500/=
2) HP All inone - 14000/=
3) HP 1460 - 6200/=
4) Epson IQ 300+II - 21500/=
5) Samsung ML 2010 (Laser Jet) - 16000/=

Casing Black
Casing White
Casing Hanble
VGA Card
T.V Card

Warranty உரிய பொருள்களுக்கு 1 Year முதல் 3 Years வரை Warranty வழங்கப்படும்.

MUSIC WORLD & COMPUTERS
141B, பலாலி வீதி, தபால்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.



சமையல் வேலைக்கு ஆள்கள் தேவை

கொழும்பில் (வெள்ளவத்தை) ஆரம்பிக்கப்படவிருக்கும் ஹோட்டல் ஒன்றுக்கு சுவையாக புரியாணி தயாரிப்பதில் நன்கு அனுபவமுள்ள ஆள் தேவை. பருத்தித்துறை (ஓடக்கரை) தோசை, அப்பம், பால் அப்பம் தயாரிப்பதற்கும், பருத்தித்துறை தட்டை வடை, உழுந்து வடை தயாரிப்பதற்கும் சகல வகையான 'சுவீற்' வகைகள் தயாரிப்பதில் கைதேர்ந்த ஆள்களும் தேவை.

சாப்பாடு, தங்குமிட வசதி இலவசம்.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

விரும்புபவர்கள் கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு திங்கள், செவ்வாய் (18,19-02-2008) காலை 9 மணி தொடக்கம் பி.ப 4 மணி வரை நேரில் வரவும்.

தொடர்பு:-
148, கோவில் வீதி, யாழ்ப்பாணம் (யுனிசெவ் முன்பாக)
தொ.பே. 0212223818, 0774528818



''சுந்தர்சன்''
மானிப்பாய்

மின் உபகரணங்கள்
மாபெரும் மலிவு விற்பனை

20.02.2008 முதல் ஆரம்பம்

மின் விசிறிகள், மின் அலங்கார விளக்குகள், சுவர் விளக்குகள், றைஸ் குக்கர்கள், உணவு அரைக்கும் Blenders, ரோஸ்ரர்கள், Iron Boxes, Charger Light, கலர் ரியூப் பல்ப்','U'' பல்ப் வகைகள் இன்னும் பல பொருள்கள் அதிரடி விலைக் கழிவில் விற்பனை.

கட்டட ஒப்பந்தக்காரர்கள், வியாபாரிகள், மின் இணைப்பாளர்கள், வீட்டு உரிமையாளர், லைட் எஞ்சின் வைத்திருப்பவர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்.

உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்!

சுந்தர்சன்,
யாழ் வீதி, மானிப்பாய்.



A/L 2008
புவியியற் தேர்வு
இல - 01
அலகு:- புறவிசைகள்
20.02.2008 புதன் 8.00 a.m.
BY:- N. பாபு
பரீட்சை நடைபெறும் இடங்கள்
நாவலர்
ஆனைப்பந்தி
DMI
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
பிற்ஸ்மன்
மானிப்பாய்



உங்கள் திருமுருகன் கொம் நெற்றில்
சகல விதமான கணனி உதிரிபாகங்களும் குறைந்த விலைகளுடன்........

Your Best Chance

Mother Board
Intel Processor
Hard Disks
DDR, DDRII, Ram
Optical Disc Drive
DVD -RW
Monitors - CRT, LCD
Flash, hp Toner (No 1)
Printer Ribbon, Cartridges and Tonner

CD banana A Grade A/A Grade 20/-

Intel pentium4 3.0 Ghz, AsRock / Foxconn Mother board, 512 DDR II, 80Gb HDD, Combo, ATX Case with SMPS, 15'' CRT Monitor

Printer, Scanner

Woofer
microlab 5.1
A4 TECH 5.1
Creative 2.1

2 GB 1800/=

Flash
1 GB Kingston
2 GB Kingston
4 GB Kingston
1 GB adata
2 GB adata

Power Tree UPS

All types of Computer Repairs
Warranty 1 & 3 Years With Service
திருமுருகன் கொம் நெற்



மானிப்பாயில் முதன் முதலில்
100% Practical Education !!! BATCH - 02
Diploma in Computer Servicing Technician
Electronic Components Study
Digital Electronics
Practical Electronics (UPS, Power supply, Monitor, Printer)
Telecommunication
Trouble Shooting Guides
Computer Customizations
PC Assembling
Etc..
மேலதிக விபரங்களுக்கு :-
UNI TECHNOLOGY
Manipay T.P:- 060 - 221 - 6433
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.02.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.